www.tamilarangam.net

# களத்தில்

“பலம்வாய்ந்த ஒரு எதிரியை படிப்படியாகப் பலவீனப்படுத்தி, அவனது மனோவுறுதியை உடைத் தெறிந்து, அவனது ஆயுத பலத்தை அழிப்பதற்கு கெரில்லாப் பாணியிலான போர்முறையே சிறந்த யுத்த தந்திரோபாயமாகும்”

- தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (18.06. 1997 ) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (137) அன்பளிப்பு: 60 p

**இரு ஆயுதக் கிடங்குகள் அழிப்பு**

**325 இராணுவத்தினர் பலி**

**5 டாங்கிகள், எம்.ஐ-24 ரக உலங்கு வானூர்தி தகர்ப்பு**

**80 போராளிகள் வீரச்சாவு**

# தாண்டிக்குளத்தில் ஊடறுத்துத் தாக்குதல் சிறிலங்காப் படையினர் சிதறி ஓட்டம்

'வெற்றி நிச்சயம்' என்ற குறியீட்டுப் பெயருடன் வன்னி மேல் இனஅழிப்புப் போரைத் தொடுத்திருக்கும் சிறிலங்காப் படையினர் மீது, 10-06-97 அன்று அதிகாலை விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்தியுள்ளனர். ஒரு மாதத்திற்கு முன்னர் பாதை அமைக்கப் புறப்பட்ட சிங்களப் படையினர், ஓமந்தை வரை சென்று முன்னேறுவதா – பின்நோக்குவதா என்று இழுபறிப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் நன்றாகத் தகவல்கள் திரட்டப்பட்டு, நுணுக்கமாகத் திட்டமிடப்பட்டு, இராணுவத் தொடரின் பின்புறமாய் ஊடறுத்து வவுனியா தாண்டிக்குளத்தில் (வெற்றி நிச்சயம் இராணுவ நடவடிக்கையின் தொடக்க இடத்தில்) இப் பெரும் தாக்குதலை விடுதலைப் புலிகள் நடாத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளின் இன்னொரு அணியினர், வவுனியாவிலிருந்து 5 மைல் தொலைவில் உள்ள நொச்சிமோட்டைப் பாலத்தைத் தகர்த்து அதனையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். சர்வதேச செய்தித் தாபனங்களின் கவனத்தை ஈர்ந்துள்ள இப்பெரும் தாக்குதலால் தாண்டிக்குளம், நொச்சிமோட்டை முகாம்களில் இருந்த சிங்களப் படையினர் பலர் பலியாக, ஏனையோர் நிலைகுலைந்து சிதறி ஓடியுள்ளனர். தாக்குதலுக்குள்ளான படையினருக்கு உதவ வேறு முகாம்களில் இருந்து உடனடியாக யாரும் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதிகாலை இரண்டு மணியளவில் சமயபுரம், தாண்டிக்குளம் தடையரண்களை உடைத்து ஊடறுத்துச் சென்ற புலிவீரர்கள், மிக வேகமாக தமது இலக்குகளைக் கைப்பற்றியுள்ளனர். இத் தாக்குதலின்போது தற்போதைய இராணுவ நடவடிக்கையை நெறிப்படுத்தும் இராணுவத் தலைமையகம் முற்றாக அழிக்கப்பட்டது. அத்துடன் ஐந்து போர் டாங்கிகளும் முற்றாக தகர்க்கப்பட்டன. இதேவேளை, ருசிய நாட்டுத் தயாரிப்பான எம். ஐ-24 ரக உலங்கு வானூர்தியொன்றும் தாக்கியழிக்கப்பட்டுள்ளது.

## இரு ஆயுதக் கிடங்குகள் தகர்ப்பு

அதிகாலை தாக்குதல் தொடங்கியதிலிருந்து அன்று இரவு முழுதும் அப் பிரதேசத்தை கட்டுப்பாட்டில் வைத்திருந்த விடுதலைப் புலிகளிடம், வன்னிப் படையெடுப்புக்கென பெருந்தொகை ஆயுதங்களால் நிரப்பப்பட்டிருந்த தாண்டிக்குளம், சமயபுரம் ஆகிய பகுதிகளில் இருந்த ஆயுதக் கிடங்குகள் வீழ்ச்சியுற்றன. அதிலிருந்த பெரும்தொகையான நவீன ஆயுதங்கள் முழுவதும் அள்ளப்பட்ட பின் ஆயுதக் கிடங்குகள் அழிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, இரண்டு 'ஆட்டிலறிப் பீரங்கிகள் விடுதலைப் புலிகள் வசம் சென்றுவிட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. கைப்பற்றப்பட்ட ஆயுத விபரங்கள் இன்னமும் தலைமைப் பீடத்திலிருந்து கிடைக்கப் பெறவில்லை. ஆனால் கொழும்புப் பத்திரிகைச் செய்தியொன்றின்படி இத்தாக்குதலில் சிறிலங்காப் படையினர் 500 கோடி ரூபாய் பெறுமதியான இராணுவ ஆயுத, தளபாடங்களை இழந்துள்ளதாக அறியப்படுகின்றது.

## 325 படையினர் பலி

இப்பாரிய தாக்குதலில் 325 படையினர் பலியாகியுள்ளதாக விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் அறிவித்துள்ளது. படுகாயமடைந்த பல படையினர் அநுராதபுரம், வவுனியா, கொழும்பு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

அடக்கு முறையாளரின்
முகடுகளை உடைத்துக் கொண்டு -
சுதந்திரத்தின் சிகரத்தில்
இனி நாங்கள் முடிசூட்டுவோம் !
காலத்தின் கர்ச்சனையாய்
செவிகளை
எம் தேசியகீதம் நிறைக்கையில்
'தமிழீழம்' -
உலகத்தின் நெற்றியில்
பொறிக்கப்படும் அந்த திருப்பெயர்.



**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிங்களப்படைக்கு ஆலோசனை வழங்க பாகிஸ்தான் இராணுவ நிபுணர்கள்

சிறிலங்காப் படையினரின் தற்போ தைய இராணுவ நடவடிக்கைக ளுக்கு ஆலோசனைகளை வழங் கவும், திட்டமிடலை மேற்கொள் ளவும் பாகிஸ்தானில் இருந்து இராணுவ நிபுணர்கள் ஏற் கெனவே சிறிலங்காவுக்கு வந்து தங்கியுள்ளனர் என்பது தற்போது உறுதியாக அறியப்பட்டுள்ளது. சிங்களப்படை மேற்கொண்டுள்ள 'ஜெயசிக்குறு' எனப்படும் இராணு வ நடவடிக்கையில் சிங்கள இராணுவத் தளபதிகளுடன் சேர்ந்து இவர்கள் இராணுவ திட்டமிடல் நடவடிக்கையில் பங்கேற்றுள்ளனர். இவர்கள் தற்போது அநுராதபுர இராணுவத் தலைமையகத்தில் தங்கியுள்ளனர் எனவும் அறியப்பட்டுள்ளது.

# வன்னி மக்களுக்கான கடுமையான உணவுத் தடை

மன்னார், வவுனியா, முல்லை த்தீவு, கிளிநொச்சிப் பகுதிக ளுக்கான உணவு விநியோகம் கடந்த 10 ஆம் திகதியுடன் சிறி லங்கா அரசு முற்றாகத் தடை- செய்துள்ளது. படையினருக்கு ஏற்பட்ட பெரும் இழப்பால் ஆத்திரமடைந்துள்ள சந்திரிகா அரசு, அதற்குப் பழிவாங்கும் நோக்கில் உணவை ஆயுத மாக்கி சர்வதேச சட்டத்தைப் புறக்கணித்து, அப்பாவித் தமிழ் மக்களின் மீது தனது காடைத் தனத்தை அதிகரித்துள்ளது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து சர்வதேச அமைப்புக் களாலும், தொண்டர் நிறுவனங் களினாலும் ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்களின் பேரில் சொற்ப அளவிலான உணவு விநியோக த்தைச் செய்ய இசைந்த சிறி லங்கா அரசு, தற்போது அனைத் துத் தரப்பு வேண்டுகோள் களையும் புறக்கணித்து, முழுமையான உணவுத் தடை யை ஏற்படுத்தி மக்கள் மீதான கொடிய ஆயுதமாக அதனைப் பிரயோகித்து வருகின்றது.

இதேவேளை, தாண்டிக்குளம் தாக்குதலால் நிலைகுலைந்துள்ள சிங்கள படைத்தரப்பு உயர்பீடம், மன்னார்ப் பகுதியில் இருந்தும் இராணுவத்தை வவுனியா, தாண்டிக்குளம் நோக்கி நகர்த்தி யுள்ளது. இதனால் மன்னார்ப் பகுதியில் இராணுவத்தினருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், இராணுவத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் எனக் கூறி மக்களின் போக்கு வரத்தை சிங்கள இராணுவம் தடை செய்துள்ளது. அவசர தேவைக ளுக்குக் கூட பயணம் செய்ய முடியாத நிலையில் மன்னார் மக்கள் தவிக்கின்றனர்.

## தாண்டிக்குளத்தில் 'புளட்' குழு உறுப்பினர்களும் பலி

தாண்டிக்குளம் மற்றும் சமயபுரப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் நடாத்திய பெரும் தாக்குதலின் போது, சிங்களப் படையுடன் சேர்ந்தியங்கும் 'புளட்' குழுவைச் சேர்ந்த சிலரும் கொல்லப்பட் டுள்ளனர் எனத் தெரிய வருகி ன்றது. சமயபுரத்தில் தமது உறுப்பினர்களில் ஏழு பேரைக் காணவில்லை எனத் தெரிவிக் கும் புளட்டினர், அதில் ஒருவ ரின் சடலத்தை மீட்டிருப் பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பு செங்கலடிப் பகுதியில் புளட் கும்பலின் முகாம் ஒன்று விடுத லைப் புலிகளால் தாக்கப்பட் டுள்ளது. இதில் மூவர் கொல்லப் பட்டதாகவும், மற்றும் சிலர் காயங்களுடன் ஓடித் தப்பித்துக் கொண்டதாகவும் மேலும் தெரி விக்கப்படுகின்றது.

## சியாமார்செட்டி விமானம் நொருங்கியது

14-06-97 அன்று அநுராதபுரம் விமானப்பயிற்சித் தளத்தில் பயிற்சி யில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா வான் படைக்குச் சொந்தமான சியாமார்செட்டி விமானம் ஒன்று விழுந்து நொறுங்கியுள்ளது எனவும், இதன்போது வான் படைப் பயிற்சியாளர் ஒருவர் இறந்துள்ளதாகவும், பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த இளம் விமானியின் நிலை என்னவென்று தெரியவில்லை எனவும் கொழும் பிலுள்ள சர்வதேச செய்தித் தாபனங்கள் செய்தி தெரிவித் துள்ளன. 27 மாதங்களில் 17 விமானங்களை சிறிலங்கா வான் படை இழந்துள்ளதாகக் குறிப் பிடும் மேற்படி செய்தித் தாபன ங்கள், விடுதலைப் புலிகளுட னான போரில், சிறிலங்கா வான் படையினர் கடுமையாகப் பாதிப் படைந்துள்ளனர் எனச் சுட்டிக் காட்டியுள்ளன.

## தமிழ்நாட்டில் ஈழத்தமிழர் ஆதரவுப் பேரணி

ஈழத் தமிழ்மக்கள் மீது சிங்கள இனவெறிப்படை நடாத்தும் இன அழிப்புத் தாக்குதல்களைக் கண்டித்து தமிழ்நாட்டில் இம் மாதம் 6ஆம் திகதி நடாத்த ப்பட்ட கதவடைப்புப் போராட் டம், முழு வெற்றி பெற்றதாகத் திராவிட கழகத்தினால் வெளியிட ப்படும் 'விடுதலை' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது. சென்னையில் 12,000 காவல் துறையினரைக் குவித்து போரா ட்டத்தை முறியடிக்க முயற்சித்த போதிலும் போராட்டம் எதிர் பார்த்த வெற்றியை எய்தியதாக அதில் குறிப்பிடப்பட்டு ள்ளது. தி. மு. க, தமிழ் மாநிலக் காங்கிரஸ் தவிர ஏனைய அனைத்துக் கட்சிகளும் கலந்து கொண்டதாகத் தெரிகி றது.

இது விடயமாக, திண்டிவ னத்தில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் கைது செய்யப்பட்டு விடு விக்கப்பட்டுள்ளார். தமிழக த்தில் போராட்டம் 85 வீதம் வெற்றி பெற்றதாகக் குறிப்பிட்ட திரு. பழ. நெடுமாறன் அவர்கள் பாண்டிச்சேரியில் போராட்டம் நூறுவீதம் வெற்றி பெற்றதாகக் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் மலேசியா உலகத் தமிழர் நிவாரண நிதி அமைப்பு, தமிழீழத்தில் சிங்கள இனவெறி அரசின் கொடூரச் செயலால் அல்லலுறும் மக்களுக்கு உதவவென நிகழ்ச்சி ஒன்றின் மூலம் ஒரு இலட்சம் மலேசிய டொலர் களை திரட்டியுள்ளனர். இந் நிகழ்ச்சியில் உரையாற்றிய உலகத் தமிழர் நிவாரண நிதிமி ன் அறங்காவலர் எஸ். பி. பதி "தனியொரு மனிதனுக்கு உண வில்லை என்றால் இந்த ஜெகத்தினையே அழித்திடுவோம்" என்று கூறினான் பாரதி. "நாம் இந்த ஜெகத்தினை அழிக்க வேண்டாம், மனிதாபிமான அடிப் படையில் ஈழத்தமிழர்களுக்கு நேசக்கரம் நீட்டுவோம்" என்றார்.

## சிங்களப் படையினர் பழிவாங்கல் தாக்குதல்

07 பொதுமக்கள் படுகொலை
17 பொதுமக்கள் படுகாயம்

சிங்களப் படையினர் தமது பழிவாங்கல் தாக்குதலை வழ மைபோல பொதுமக்கள் பக்கம் திருப்பியுள்ளனர். ஓமந்தையில் நிலைகொண்ட இராணு வத்தினர் மாங்குளம் பகுதி நோக்கி மேற் கொண்ட கண்மூடித்தனமான எறிகணை வீச்சில் எழு பொது மக்கள் பலியாகியுள்ளனர். மேலும் 17 பொதுமக்கள் படுகாய மடைந்த நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர். பொதுமக்கள் செறிவாக வாழும் மாங்குளம் மத்திய பகுதி நோக்கி இலக்கு வைத்து நடாத்தப்பட்ட இத் தாக்குதலில், 25 நிமிட இடைவெளியில் சுமார் 50 எறி- கணைகள் வீழ்ந்து வெடித்து நாசம் விளைவித்துள்ளன.

மாங்குளம் மகாவித்தியாலய ஆசிரியையான திருமதி மாக்கிர ட் மல்லிகா கணேசமூர்த்தி (33), அ. பாலச்சந்திரன் (40), உதய நகரைச் சேர்ந்த கந்தசாமி ஆகியோர் இறந்தவர்களில் இனங் காணப்பட்டுள்ளனர். படுகாயம டைந்தவர்களில் இருவர் ஆறு வயதிற்குட்பட்ட சிறுமிகள் ஆவர்.

இதேவேளை, புதுக்குளம் பகுதி நோக்கி நடாத்தப்பட்ட எறி கணை வீச்சால் பாலகந்தரம் பிள்ளை சிவபாலன் (31) என்பவரும் சிங்களப் படையால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.


எழுச்சிப் பாடகர்
தேனிசை செல்லப்பா அவர்களின்..

"புயலிசை மாலை"

காலம் : 29 - 06 -1997 ஞாயிற்றுக் கிழமை
நேரம் : மாலை 6.00 மணி
இடம்: **Camden Centre, Bidborough Street London WC1H 9JE**
* (Underground) **King's Cross**


## அதிரடிப்படை மீது அதிர்ச்சித் தாக்குதல்

### 15 விசேட அதிரடிப்படையினரும்
### 4 ஊர்காவற் படையினரும் பலி
### 3 போராளிகள் வீரச்சாவு

'10-06-97 இல் தாண்டிக் குளத்தில் நடந்த தாக்குதலின் அதிர்ச்சியில் இருந்து, சிங்களப் படைகள் விடுபடுவதற்குள் 16-06-97 திங்களன்று மட்டக்களப்பு-புல்லுமலையில், விடுதலைப் புலிகள் சிங்களப் படை மீது அதிரடித் தாக்குதல் ஒன்றை வெற்றிகரமாக நடாத்தியுள்ளனர். காலை 8.25 மணியளவில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் 15 விசேட அதிரடிப்படையினரும் 4 ஊர்காவற்படையினரும் கொல்லப்பட்டனர். புல்லுமலை தம்பாட்டி அதிரடிப்படை முகாமிலிருந்து, கிடாரம் கோட்டம் நோக்கி வீதித்தடை- களை அகற்றிச் சென்ற அதிரடிப்படையினரும் ஊர்காவற் படையினரும் விடுதலைப் புலிகளால் இடைமறித்துத் தாக்கப்பட்டனர். இதன்போது 4 ஊர்காவற்படையினர் கொல்லப் பட்டனர்.

இவர்களை மீட்பதற்காகப் புறப்பட்ட மற்றொரு விசேட அதிரடிப்படை அணியும், காத்திருந்த விடுதலைப்புலிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டது. இத்தாக்குதலிலேயே 15 அதிரடிப் படையினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயமடைந்தவர் களையும் தூக்கிக்கொண்டு ஓடித்தப்பிக் கொண்டனர். ஏ.கே.எல்.எம்.ஜி, 60 மிமீற்றர் கொமாண்டோ மோட்டார் உட்பட பல ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொண்ட விடுதலைப் புலிகள், இறந்த படையினரின் 10 உடல்களையும் எடுத்துக்கொண்டனர்.

இவ்வீரமிகு வெற்றித் தாக்குதலில்

**லெப். வைகுந்தன் (கந்தசாமி மேனன்- மட்டக்களப்பு),**

**லெப். பாலசேகர் (ஆனந்தன் கோவர்த்தன ராசா-அம்பாறை),**

**லெப். சின்னத்தேவன் (தம்பிராசா சிறீகாந்தன்- மட்டக்களப்பு)**

ஆகிய மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர். எமது தாயகத்தை எதிரிப் படைகளிடமிருந்து மீட்கும் போரில்தமது இனிய, இளைய உயிர்களை ஈகம் செய்த இம் மாவீரர்களுக்கு எமது வீரவணக்கம்.

www.tamilarangam.net



# வாலில் அடியல்ல தலையில் இடி

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மற்றொரு மகத்தான வரலாற்றுச் சாதனை, 'வெற்றி நிச்சயம்' என்ற இராணுவ நடவடிக்கையின் பிரதான ஆயுதக் களஞ்சியமாகவும் அதன் பின்தளமாவும் பலம் பொருந்தியதாகவும் வவுனியா நகரிலிருந்து இரண்டு மைல் தூரத்திலும் இருந்த தாண்டிக்குளம் முகாம், விடுதலைப் புலிகளால் ஆனி 10ஆம் நாள் அதிகாலை முழுமையாகவே தகர்க்கப்பட்டு அன்றிரவு வரை அவர்களின் முழுக்கட்டுப்பாட்டில் இருந்துள்ளமையாகும். இந்த வெற்றித் தாக்குதலின் போது, 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கைக்கென தாண்டிக்குளத்திலும் சமயபுரத்திலும் ஆயுதங்கள் குவிக்கப்பட்ட நிலையில் இருந்த சிறிலங்காவின் இருபெரும் ஆயுதக் கிடங்குகள் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியுற்றன. "ஜெயசிக்குறு" இராணுவ நடவடிக்கையினை நெறிப்படுத்துவதில் பெரும்பங்கு வகித்த சிறிலங்காவின் 55வது படைப்பிரிவுத் தலைமையகம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றி அழிக்கப்பட்டுள்ளது. "ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கைக்குப் பிரதான விநியோகப் பாலமாக இருந்த நொச்சிமோட்டைப் பாலமும் தகர்க்கப்பட்டது. கூட்டு மொத்தமாக ஆயுத வழங்கல், தொடர்புப் பாதைகள், மற்றும் விநியோக வழங்கல் என்பனவும் நெறிப்படுத்தல் தலைமையகமும் விடுதலைப் புலிகளால் திட்டமிட்ட வகையில் இலக்காக்கி அழிக்கப்பட்டுள்ளது. மிகவும் நுணுக்கமான வகையில் திட்டமிடப்பட்டு, ஆக்கிரமிப்பு இராணுவம் ஓமந்தைவரை நிலைகொண்டுள்ள நிலையையும் பொருட்படுத்தாமல் விடுதலைப் புலிகள் பின்புறமாய் ஊடுருவி, இவ்வெற்றித் தாக்குதலை எதிர்பார்த்ததை விட பெரும் வெற்றியுடன் நடாத்தியுள்ளனர்.

சிறிலங்காவின் தலையில் விழுந்த இடியாக இத்தாக்குதல் அமைந்து, 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையை நிலைகுலையச் செய்துள்ளது. விழுந்தும் மீசையில் மண் ஒட்டாதவன் கதையாக இத்தாக்குதலின் மூலம், 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையை நிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்ட சிறிலங்கா அரசு, அதனைச் சமாளித்து ஏதோ "தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக" தகவல் வெளியிட்டுள்ளது.

சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்த மேலும் ஒருபடி மேலேபோய், "விடுதலைப் புலிகளால் தலையைத் தாக்க முடியவில்லை, வாலையே தாக்க முடிந்துள்ளது" என்று அடுக்குமொழி பேசி தோல்வியின் தாக்கத்தை மூடி மறைக்க முயன்றுள்ளார்.

ஆனால், சிறிலங்காவின் முன்னாள் விமானப்படைத் தளபதி கரி குணதிலகா, "இத்தாக்குதல் படையினருக்குப் பெரும் பின்னடைவு என்பதில் சந்தேகமேயில்லை" எனக் குறிப்பிட்டுள்ளதுடன், ஜெயசிக்குறு படையினருக்கான விநியோகங்கள், தொடர்புகள் தடைப்பட்ட நிலையில் ஏற்படக்கூடிய பேராபத்துக்கள் குறித்தும் கவலை தெரிவித்துள்ளார்.

சுருக்கமாகச் சொன்னால், இராணுவவழித் தீர்வுக்கு சிறிலங்கா தொடர்ந்தும் முயலுமானால், அதன் தலையில் இத்தகைய இடிகளும் தொடரும் என்பதே வரலாறு உணர்த்தும் உண்மை.

தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் கூறியிருப்பதுபோல, "பெருமளவு படைபல வலிமைகொண்டு மண்ணை ஆக்கிரமிக்கலாம்; ஆனால் அந்த மண்ணைத் தொடர்ந்தும் ஆக்கிரமித்து வைத்திருக்க முடியாது. இதனை உலக வரலாறுகள், ஆக்கிரமிப்பு அரசுகள் பலவற்றுக்குத் தெளிவாக உணர்த்தியுள்ளன. இந்த உலகளாவிய உண்மையைச் சிறிலங்கா ஏற்காதவரை அதன் தலையில் விழுகிற இடிகளைக் கொண்டே இந்த உண்மையைக் கண்டுகொள்ள வேண்டியிருக்கும். மேலும் தாண்டிக்குளம் தாக்குதலானது, சர்வதேசத்துக்கு தமிழர் தாயகத்தின் உண்மையான இறைமையாளர்கள் யார் என்பதை மேலும் தெளிவாக்கியுள்ளது. இதனை இனங்கண்டு தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்து, தமிழீழ மக்களுக்கான மனித நேய உதவிகளை நேரடியாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் என்பவற்றினூடாகச் செய்ய சர்வதேச அரசுகள் முன்வர வேண்டும் என்பதே சர்வதேசத் தமிழர்களின் கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கையின் அவசியத்தை வலியுறுத்தி, சர்வதேச நாடுகளிலும் எமது மக்களின் பரப்புரையாளர்களாக நாமே மாற வேண்டிய நேரம் இதுவென்பதை உணர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகப் பணிமனைகளுடன் இணைந்து செயற்படுவோம்! ✷

# எமது இனிய யாழ்ப்பாணத் திருநாடே! அவர்களின் வருகைக்காக காத்திரு!

மீண்டும் உனது கால்களில் சங்கிலியைப் பிணைத்து விட்டான் எதிரி. நீண்டு செல்லும் அத்தொடர் சங்கிலியின் மறுமுனையைப் பற்றியபடி நிற்கிறார்கள் முகமூடியணிந்த அந்நியர்கள். எத்தனையோ நூற்றாண்டுகளின் பின்பு, ஒரு சில ஆண்டுகள்தான் சுதந்திரத்தின் சுகத்தை உன்னால் அனுபவிக்கமுடிந்தது. அதற்குள் மீண்டும் ஒரு ஆதிக்க ஆட்சியில் உனக்கு விலங்கிடப்பட்டுவிட்டது.

இன்று உனது நகரத்து வாசல்கள் இரும்புக் கதவுகளால் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அங்கு காக்கி அணிந்த அரக்கர் காவலுக்கு நிற்கின்றனர். நகரத்தின் நடுவே குதிரைகள் மீது வாளேந்தி நின்ற சங்கிலி மன்னனின் சிலையைக் காணவில்லை. இரவோடு இரவாக இடித்துவிட்டார்கள். அந்த இடிபாடுகள் மீது எழுப்பப்பட்ட கம்பத்தின் மீது பிக்குகள் இராச்சியத்தின் மஞ்சள் கொடி பறக்கிறது.

உனது முகத்தை இனம் காண முடியாது சிதைத்து விட்டிருக்கின்றான் எதிரி. வீடுகளை இடித்து, வீதிகளை அழித்து, மலைத்தொடராக எழுப்பப்பட்ட பெர்லின் சுவர்கள் உனது இதயக் கூட்டினைத் துண்டாடி நிற்கின்றன. ஒரே மண்ணில் ஒன்று பட்டு வாழ்ந்த் மக்களைக் கூறுபடுத்தி வேறுபடுத்தும் முட்கம்பி வேலிகள் உனது மண்ணில் எத்தனை மாற்றங்கள்.

உனது வீதிகள் எங்கும் ஆயுதம் ஏந்திய அரக்கர் படை. இரவு பகலாக ஆயுத வாகனங்களின் அட்டகாசப்பவனி வீதிகள் ஓரம் குனிந்த முகத்துடன் சோகத்தைச் சுமந்து செல்லும் மக்கள். நாளாந்தம் காவல் சாவடிகள் நோக்கிய மக்களின் மௌன ஊர்வலங்கள். அங்கு அரைநாள் தவமிருந்து, அடையாளம் காட்டி, அவமானப்பட்டு அவர்கள் நகரும் காட்சி நெஞ்சத்தை நெகிழ்த்துகிறது.

தினமும் மேற்கு வானில் சூரியன் அடங்குவதற்கு முன்னே உனது ஊர்கள் எல்லாம் அடங்கிவிடுகின்றன. மாலை சாய்ந்ததும் வீட்டுக் கதவுகளை இறுகப்பூட்டிக்கொள்கிறார்கள் மக்கள். நான்கு சுவர்களுக்கு மத்தியில் நீண்டு செல்லும் வாழ்க்கை. அர்த்தமற்றதாக நழுவும் காலம். இரவின் வருகை பயங்கரமானது. நடுநிசியில் தெருக்களில் விரைந்து ஓடும் சப்பாத்துக்களின் ஓசையும் தொடர்ந்து கேட்கும் துப்பாக்கி வேட்டுக்களும், வீட்டுக்கதவுகள் ஓங்கி அறைந்து தட்டப்படும் சத்தங்களும், இரத்தத்தை உறைய வைக்கும் இரவின் அனர்த்தங்கள். காணாமல் போனோரின் புதைகுழிகள் இரவில்தான் தோண்டப்படுகின்றன.



காலம் காலமாக உன்னைக் கட்டிப்போட முனைந்தவர்கள், உனது மக்களை வெட்டிக் கொலை செய்தவர்கள், உனது மார்பில் குண்டுகளைப் பொழிந்தவர்கள் இன்று நேசக்கரம் நீட்டுவது போல நடிக்கிறார்கள். ஜாக்கிரதையாக இரு. இவர்களது முகமூடிகளைக் கண்டு ஏமாந்து விடாதே. இவர்கள் உனது வரலாற்றுப் பகைவர்கள். உனது மண்ணை மிதித்து நிற்கும் ஆக்கிரமிப்பாளர்கள். அன்பு காட்டி அடிமை கொள்ளுவது இவர்களது தந்திரம்.

எனது இனிய யாழ்ப்பாணத் திருநாடே கலக்கம் கொள்ளாதே, கவலைப்படாதே. உனது விடுதலையை வென்றெடுக்க வேங்கைப்படை தயாராகின்றது. உனது விலங்கை உடைத்து, உனது கண்ணீர் துடைத்து உனது கௌரவத்தைக் காப்பார்கள். அவர்களின் வருகைக்காகக் காத்திரு. அவர்கள் வருவார்கள். மெல்ல மெல்ல, இரவோடு இரவாக அவர்களின் வருகையோடு எதிரியின் தூக்கம் கலையும். இன்று உன்னைத் துன்புறுத்தித் துயரத்தில் ஆழ்த்தும் காக்கிச் சட்டைக்காரரையும், காக்கை வன்னியர்களையும் உனது மண்ணில் புதைக்க வருவார்கள். அந்தச் சுதந்திர வீரர்களின் வருகைக்காக ஆவலுடன் காத்திரு. ✷

(நன்றி: வெளிச்சம்)



கடந்த 26 - 05 - 97 அன்று இரண்டாம் ஆண்டாக நடைபெற்ற தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழா-97 இல் நடாத்தப்பட்ட நல்வாய்ப்புச் சீட்டெழுப்பின் (தேர்வு இலக்கம் 1924) Vauxhall Astra காருக்கான பரிசிலைத் தட்டிக்கொண்ட இலண்டன் தென்-கிழக்குப் பிராந்தியத்தைச் சேர்ந்த பெண்மணி காருடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ தேசியப்பணியில் அனைத்துலகத் தமிழ் மக்கள்


தமிழர் புனர்வாழ்வுக்கழக யேர்மனிக் கிளை நடாத்தும்

**புனர்வாழ்வுக் கலைத்தென்றல் 1997**

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 12 ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறவிருக்கும் இந்நிகழ்ச்சியில் இசை நடனம், நகைச்சுவை விருந்து, சிறப்பு நிகழ்ச்சி என்பன நடைபெறவுள்ளன.

**இடம்**
Kolping Haus
59872 Meschede

**காலம்**
28 . 06. 97
சனிக்கிழமை
16:30 மணி


## கோலாலம்பூரில் நூல் வெளியீடு

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில், உலகத் தமிழர் நிவாரண நிதி ஏற்பாட்டில் 13-4-97 இல் திரு. வசந்தராஜா எழுதிய தமிழர் "வடபுலப் பெயர்ச்சி அவலமும் அதற்கு அப்பாலும்" என்ற நூல் வெளியீடு, மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. ஆதிக்குமணன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

தமிழீழப் போரில் வீரமரணம் அடைந்த போராளிகளுக்கும் மரணமடைந்த பொது மக்களுக்குமான அமைதி வணக்கத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது.

உலகத் தமிழர் நிவாரண நிதியின் அறங்காவலர் திரு. பசுபதி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில், "இன்று இலங்கையில் அல்லல்படும் தமிழர்களுக்காக மலேசியாவில், தமிழர்களாகிய நாம் ஒன்று கூடியுள்ளோம். எமது அமைப்பு மலேசியா வாழ் தமிழ் மக்களிடம் நன்கொடைகளைத் திரட்டி, அவுஸ்ரேலியாவிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் (T.R.O.) தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கிறோம். இவ்விழாவில் கிடைக்கும் நன்கொடைகளையும் அங்குதான் அனுப்பவுள்ளோம். ஆகவே, எம் சகோதரர்களுக்குத் தம்மால் இயன்ற அளவு நிதி உதவி வழங்க முன்வர வேண்டும்" என அறைகூவல் விடுத்தார்.

தலைமை உரையாற்றிய திரு. ஆதி குமணன் அவர்கள் தனது உரையில், இலங்கையில் தமிழர்கள் அந்த நாட்டிற்குள் அடைக்கலம் தேடி வரவில்லை; சிங்களவர்களைப் போலவே அவர்களும் அந்த நாட்டுப் பூர்வீக குடிமக்கள். ஆங்கிலேயரது ஆட்சிக்குப் பின் 1948இல் சுதந்திரம் கிடைத்த பிறகு, ஆட்சிக்கு வந்த அரசுகளுக்கும் தமிழர்களுக்குமிடையிலான உறவில் விரிசல் ஏற்படத் தொடங்கியது. இராணுவ அடக்குமுறை அந்த நாட்டில் தமிழ் கட்சிகளை வலுவிழக்கச் செய்ததுடன் விடுதலை இயக்கங்கள் உருவாக வழி செய்தது; ஐரோப்பிய நாடுகளில் தமிழர்கள் புலம் பெயர்ந்தார்கள். ஆயிரக்கணக்கானோர் போரில் சிக்கி இறந்தார்கள். இலட்சக்கணக்கானோர் அகதியானார்கள்; இந்தத் தமிழர்களுக்கு உலகில் வாழுகின்ற தமிழர்கள் குரல் கொடுக்க வேண்டியது மனித நேயமாகும்" என்றும் கூறினார்.

மேலும், அங்கு வெளியிடப்பட்ட நூல் பற்றிக் குறிப்பிடுகையில், "இந்த வரலாற்று நூலில் இலங்கை இராணுவத்தினரின் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைகளும் உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழர்களின் நிலைமையும் முழுமையாக விளக்கப்பட்டுள்ளதை படித்து உணரலாம்" என்றும் கூறினார்.

சிறப்புரையாற்றிய மலேசிய தேசிய பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர், கலாநிதி திருமதி. டக்மார் (Dakmar) அவர்கள் தமது உரையில்,




"சுதந்திரத்துக்குப் பின் தமிழ் மக்கள் இராணுவ – அரசியல் அடக்கு முறைக்கு ஆளாகினர். பல இனக் கலவரங்களையும் படுகொலைகளையும் சந்தித்ததுடன், போலி வாக்குறுதிகளையும் நம்பி ஏமாற்றம் அடைந்ததினால் விரக்தி அடைந்த தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி பல குழுக்களாக இலங்கை அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் இறங்கினர். மக்களுக்குப் பாதுகாப்பாகவும் உறுதியாகவும் தற்போது பலமாகவும் திகழ்பவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளே! அதை மக்களும் புலிகளும் உலகத்திற்கு நிரூபித்துள்ளார்கள்" என்றார்.

இந்நூலின் மதிப்புரையை மலேசிய தமிழ் நெறிக்கழக தலைவர் திரு. இரா. திருமாவளவன் அவர்கள் வழங்கினார். அவர் தனது மதிப்புரையில், "நாம் எவ்வளவோ வரலாற்று நூல்களைப் படித்துள்ளோம். அவை எல்லாம் பல தலைமுறைக்கு எழுதப்பட்டவை. ஆனால், இந்த வரலாற்று நூல் தற்போது உலகில் சகல இன மக்களாலும் பேசப்படுகின்ற, கேட்கப்படுகின்ற ஒரு இனத்தின் வரலாற்று இடம் பெயர்வையும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற உன்னதமான வீரப் போராட்டத்தையும் இலங்கை அரசாங்கம் செய்கின்ற கொடுமைகள், சித்திரவதைகள், பொய் வாக்கு மூலங்கள் சதித்திட்டங்கள், போன்றவற்றைத் தெளிவாகவும் மிகவும் விரிவாகவும் ஆதாரத்துடனும் விளக்கி, இலங்கை அரசின் முகத்திரையை நூல் ஆசிரியர் கிழித்துக் காட்டியுள்ளார். உலகில் தமிழ்மொழி பேசுகின்ற மக்கள் இந்த நூலை களஞ்சியமாக வைத்திருக்க வேண்டும். இந்த நூலை எழுதிய மதிப்புக்குரிய திரு. வசந்தராஜா அவர்களுக்கு முதல் நன்றியையும், இந்நூலை தமிழில் மொழிபெயர்த்த திரு. சங்கரமூர்த்திக்கும் மற்றும் அவர்கள் எடுத்த இந்த அரும்பெரும் முயற்சிக்கு உறுதுணையாக நின்ற அனைவருக்கும் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

திரு. ஆதி குமணன் அவர்களால் முதல் நூல் வெளியிடப்பட இளம் தொழில் அதிபர் திரு. மணியம் அவர்கள் பெற்றுக்கொண்டார். இந்நூல் வெளியீட்டின் பின் திரு. பழ. வீரன் அவர்கள் தமிழீழ எழுச்சி கானம் ஒன்றை வழங்கினார். திரு. இரா. இளம் குமணனின் கவிதை அரங்கேற்றம் மக்கள் உணர்வுகளைத் தட்டி எழுப்பியது.

விழாவிற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய உலகத் தமிழர் நிவாரண நிதிக் குழுவின் நிர்வாகச் செயலாளரும் நூல் வெளியீட்டு ஒருங்கிணைப்பாளருமான திரு. மு. வரதராசு அவர்கள், "ஐரோப்பிய நாடுகளில் வெளியீடு கண்ட இந்த வரலாற்று நூல், தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மலேசியாவில்தான் முதற்தடவையாக வெளியீடு கண்டுள்ளது. நிதிக் குழுவின் முயற்சியில் முதற்தடவையாக நடைபெற்ற இந்த நூல் வெளியீட்டுக்கு நாடு முழுவதிலுமிருந்து மக்கள் கலந்துகொண்டது மகிழ்ச்சிக்குரியது எனக் குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சியில் நானூறுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். ✳

1ம் பக்கத் தொடர்ச்சி....

## 325 படையினர் ...

தெரிவித்துள்ளன. கைப்பற்றப்பட்ட பகுதிகளில் விடுதலைப் புலிகள் நிலைகொண்டு அப்புறப்படுத்த வேண்டியவற்றை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தமையால், படையினரின் சடலங்களை மீட்க முடியாமல் இராணுவத்தினரும் அவர்களுக்குத் துணைபோகும் 'புளட்' குழுவும் வவுனியாவில் காத்துக் கிடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, குடாநாட்டுப் படையினருக்கு விநியோகப் பாதையமைக்கச் சென்ற படையினருக்கான விநியோகம், பிரதான தொடர்ப்பாலமான நொச்சிமோட்டைப் பாலம் தகர்க்கப்பட்டதால் கேள்விக்குறியாகியுள்ளதென இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

## 80 போராளிகள் வீரச்சாவு

இவ் வீரமிகு வெற்றித் தாக்குதலில் 21 பெண் போராளிகள் உட்பட, எண்பது போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். மேலும் இத் தாக்குதலில் பெண் போராளிகள் பெரும் பங்கை ஆற்றியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிரிப் படை எமது தாயக மண்ணில் கால் பதிக்க முயன்றால் என்ன விலை கொடுக்க வேண்டிவரும் என்பதை மீண்டும் ஒருமுறை செயல்மூலம் காட்டி, அத் தாயக மண்ணை மீட்க தம் இளைய இன்னுயிரை ஈந்த எம் மாவீரர்களுக்கு எமது வீர வணக்கம்.

## ரத்வத்தவின் விசமப் பரப்புரை

தாண்டிக்குளப் பகுதியைக் கைப்பற்றிய விடுதலைப்புலி வீரர்கள், அங்கிருந்து வவுனியா சிறிலங்கா விமானப் படைத் தளம் மீது தொடர்ச்சியான 'ஆட்டி லறித்' தாக்குதல்களையும், மோட்டார்த் தாக்குதலையும் மேற்கொண்டனர். இத் தாக்குதல் நடந்து கொண்டிருந்தபோது, மேலதிக சிங்களப் படையினர் அவ்விடத்திற்கு வருவதற்கு பலத்த தயக்கம் காட்டிய தாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது இவ்வாறிருக்க, சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பமைச்சர் உண்மைக்கு மாறான தகவல்களை தெரிவித்துள்ளார். இறந்த படையினரது தொகையையும், ஆயுத இழப்புக்களையும் மறைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அத்துடன், விடுதலைப் புலிகளின் 'ஆட்டி லறித்' தாக்குதலால் பொது மக்கள் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளதாக விசமத்தனமாகப் பரப்புரை செய்துள்ளார். இதனை முற்றாக மறுத்துள்ள விடுதலைப் புலிகள், பலத்த கண்டனமும் தெரிவித்துள்ளனர். சிங்களப் படைகளைத் தமிழ்ப் பகுதிகளில் இருந்து வெளியேற்றுவதை ஒரு தேசியக் கடமையாக விடுதலைப் புலிகள் வரித்துக் கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கும் விடுதலைப் புலிகளின் அறிக்கை, இப் பாரிய தாக்குதலால் சிறிலங்காப் படையின் உயர்மட்டத்தில் ஏற்பட்டுவரும் அவல நிலையை இப் பொய்ப் பரப்புரை சுட்டிக்காட்டியுள்ளது. இது ஒருபுறம் இருக்க, இத் தாண்டிக்குள தாக்குதல் சிங்களப் படை உயர்மட்ட அதிகாரிகளிடையே பல பிரச்சனைகளை உருவாக்கியுள்ளதாகவும், தோல்விக்கு யார் பொறுப்பு என்ற வகையிலான கருத்து மோதல்களாக அவை மாறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

www.tamilarangam.net



# சிறிலங்கா + தமிழீழம் = இலங்கை
# இலங்கை - சிறிலங்கா = தமிழீழம்

காளமேகப் புலவர் பெயருக்கு ஏற்றவாறு மேகம் மழைபொழிவதுபோல் கவிதையை மழையாகப் பொழியக் கூடியவர்.

மூச்சுவிடு முன்னமே முந்நூறும் நானூறும் ஆச்சென்றால் ஐந்நூறும் ஆகாதோ? என்று கேட்டதற்கு காளமேகப் புலவர்–

**"இம் என்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்**
**ஆம் என்றால் ஆயிரம் பாட்டாகாவா? – சும்மா**
**இருந்தால் இருப்பேன் எழுந்தேனே ஆயின்**
**பெரும் காளமேகம் பி(ள்)ளாய்!"**

என்று பாடி இம் என்று சொல்லுவதற்கு முன் எழுநூறும், எண்ணூறும் ஆம் என்றால் ஆயிரம் பாடல்கள் மழை பொழிவதுபோல் என்னால் பாட முடியும் எனக் கூறுகிறார்.

சிங்கள – பௌத்த பேரினவாதத்துக்கு சாமரை வீசும் கொழும்பிலிருந்து வெளிவரும் Sunday Times, Sunday Leader, The Island பத்திரிகைகளைப் படிக்கும் போது எனக்குக் காளமேகப் புலவரது இந்தப் பாடல் நினைவுக்கு வரும்.

**- நக்கீரன் -**

'பயங்கரவாதம்', 'பயங்கரவாதிகள்' இந்த இரண்டு வார்த்தைகளும் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள், ஆய்வுக் கட்டுரைகள், தலையங்கங்கள் இவற்றில் இடம்பெறத் தவறவே தவறாது.

விடுதலைப் புலிகளை அர்ச்சிக்கவே இந்த இரண்டு வார்த்தைகளையும் இந்தப் பத்திரிகைகள் தாராளமாகவே உபயோகிக்கின்றன.

விடுதலைப் புலிகளை மட்டுமல்ல, தமிழ்த் தேசியத்தை இழிவுபடுத்தவும் இந்த வார்த்தை அம்புகள் வீசப்படுகின்றன.

இந்தப் பத்திரிகைகளைப் படிப்பதற்கு பொறுமை வேண்டும். பொறுமை இல்லாதவர்கள் குறைந்தது இரண்டு பனடோலாவது முன்கூட்டியே போட்டு விட்டுத்தான் படிக்க வேண்டும். நான் இரண்டாவது வழியைப் பின்பற்றுகிறவன்.

சிறிலங்கா இராணுவம், விமானப்படை கடற்படையை விட பத்துமடங்கு தொகையான விடுதலைப் புலிகளை இந்தப் பத்திரிகைகளில் எழுதும் கட்டுரையாளர்கள் பேனாவால் குத்திக் 'கொலை' செய்து விடுவார்கள்.

இந்தப் பத்திரிகைகள் வாரம் தவறாது விலைப்படுத்தும் கோட்பாடுகள் ஏழு. அவையாவன:

1. விடுதலைப் புலிகள் 'பயங்கர வாதிகள்' விடுதலைப் புலி இயக்கம் 'பயங்கரவாத இயக்கம்'.

2.இனப் பிரச்சனை என்று ஒன்றும் இல்லை. இருப்பது பயங்கரவாதப் பிரச்சனைதான்.

3.விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் ஒழித்துக் கட்டிவிட்டால் பயங்கர வாதத்தை ஒழித்துவிடலாம்.

4.விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுமட்டும் பேச்சுவார்த்தைபற்றி மூச்சு விடக் கூடாது.

5. இலங்கை ஒரே நாடு; நாட்டின் பிரதேச கட்டுப்பாடு (Territorial integrity) மீறப்படக்கூடாது.

6.ஒற்றையாட்சி (யாப்பு) முறையில் மாற்றம் செய்யக்கூடாது.

7.சிங்களவர்களின் பிரதான கட்சிகளான பொது மக்கள் ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் • கட்சியும் பொது எதிரியான விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஒன்றுபட வேண்டும்.

இந்தப் பின்னணியில் சனாதிபதி சந்திரிகாவிற்கும் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தை இந்தப் பத்திரிகைகள் 'வரவேற்றிரு க்கின்றன'.

Sunday Times பத்திரிகை ஆசிரிய தலையங்கமே தீட்டியுள்ளது.

நாடு முதலில் (Country first) என்று மகுடமிட்டு எழுதியிருக்கும் இந்தத் தலையங்கத்தின் இறுதியில் இப்படி எழுதப்பட்டிருக்கிறது.

'Thus it is indeed inspiring that at this late and dark hour President Kumaratunga and Ranil Wickramesinghe, along with many others we hope, have decided to rise from politics to statesmanship.

The LTTE will be disappointed to know that the two parties will join hands in the national interest and the underlying theme of this national interest is to work towards the principle. "One Country. One people".

"இந்த இருண்ட நேரத்தில் சனாதிபதி சந்திரிகாவும் ரணில் விக்கிரமசிங்காவும் ஏனையவர்களும் அரசியலில் இருந்து இராஜதந்திரத்துக்கு உயர்ந்து விட்டது உற்சாகத்தை அளிக் கிறது.

இந்தக் கட்சிகள் தேசிய நலன்களு க்காகக் கைகோர்த்து விட்டதைப் பார்க்க விடுதலைப் புலிகளுக்கு ஏமாற்றமாக இருக்கும். இந்தத் தேசிய நலனின் அடிப்படைப் பொருள் என்னவென்றால், "ஒருநாடு, ஒரே மக்கள்" என்ற கோட்பாட்டுக்கு உழைப்பதாகும்".

"சுற்றியும் சுற்றியும் சுப்பற்றை கோடிக்குள்" என்பார்கள்.

Sunday Times ஆசிரியர், சந்திரிகா – ரணில் விக்கிரமசிங்கா உடன்பாட்டைக் கூட தனது கண்ணோட்டத்தில்தான் பார்க்கிறார்.

அதாவது அவரது அகராதியின் பிரகாரம், தேசிய நலன்கள் என்றால் சிங்களத் தேசியத்தின் நலன்கள்.

ஒரு நாடு என்றால் இலங்கைத் தீவு முழுதும், ஒரே மக்கள் என்றால் சிங்கள மக்கள் மட்டும்.

இலங்கைத் தீவு ஒரே நாடு என்று மூச்சுக்கு முன்னூறுதரம் சொல்லும் இந்தப் பத்திரிகை ஆசிரியர்கள், நாடு ஏற்கனவே இரண்டாகப் பிளந்து விட்டதைப் பார்க்க மறுக்கிறார்கள்.

முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்கப் பார்க்கிறார்கள்.

ஐம்பது, அறுபதுகளில் தமிழீழக் கோரிக்கையை பேராசிரியர் சுந்தர லிங்கத்தின் அடங்காப்பற்று முன்னணியும், திரு. வி. நவரத்தினத்தின் தமிழர் சுயாட்சிக் கழகமும் முன்வைத்தபோது, அன்றைய தமிழரசுக் கட்சி அதனை கேலிசெய்தது.

தமிழீழம் கிடைத்தால் கொழும்புக்குப் போவதற்கு வவுனியாவில் விசா எடுக்க வேண்டும், அதற்கு சுந்தரலிங்கமும் நவரத்தினமும் தயாரா என்று அமிர்தலிங்கம் போன்றோரால் தமிழரசுக் கட்சி மேடைகளில் கேட்கப்பட்டது. அப்போது கேலி செய்யப்பட்ட இந்த விசாப் பிரச்சனை இன்று நிதர்சன மாகிவிட்டது.

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குப் போவதற்கு விசா கேட்கப் படுவதுபோல, வவுனியாவிலிருந்து கொழும்பு போக விரும்பும் தமிழர்கள் வவுனியா எல்லையில் சிறிலங்கா நாட்டுக்கான விசா எடுத்தால் மட்டுமே பயணம் செய்ய அனுமதிக் கப்படுகிறார்கள்.

*ஐம்பது, அறுபதுகளில் தமிழீழக் கோரிக்கையை பேராசிரியர் சுந்தரலிங்கத்தின் அடங்காப்பற்று முன்னணியும், திரு. வி. நவரத்தினத்தின் தமிழர் சுயாட்சிக் கழகமும் முன்வைத்தபோது, அன்றைய தமிழரசுக் கட்சி அதனை கேலிசெய்தது.*

*தமிழீழம் கிடைத்தால் கொழும்புக்குப் போவதற்கு வவுனியாவில் விசா எடுக்க வேண்டும், அதற்கு சுந்தரலிங்கமும் நவரத்தினமும் தயாரா என்று அமிர்தலிங்கம் போன்றோரால் தமிழரசுக் கட்சி மேடைகளில் கேட்கப்பட்டது. அப்போது கேலி செய்யப்பட்ட இந்த விசாப் பிரச்சனை இன்று நிதர்சனமாகிவிட்டது.*

அதுமட்டுமல்ல, விசாமட்டும் போதாது கொழும்பில் இருக்கும் உறவினர் அல்லது நிரந்தரமாக வசிப்பவர்கள் அப்படி அங்கு போக விரும்புபவர்களை Sponsor செய்ய வேண்டும். அப்புறம் அவர்கள் வவுனியாவிற்கு வந்து அழைத்துப்போக வேண்டும். அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே அனுமதி கிடைக்கிறது.

கனடாவில் இருக்கும் ஒருவர் தனது குடும்ப உறவினர்களை Sponsor செய்ய என்ன என்ன ஆவணங்கள் வேண்டுமோ, அந்த உறவினர்கள் என்ன என்ன சோதனைகளில் சித்தியடைய வேண்டுமோ அதேபோல் தென்பகுதி செல்ல விரும்பும் தமிழர்களும் அப்படியான நிபந்தனைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

நோயாளராக இருந்தால் வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரியின் சிபார்சு வேண்டும்.

தென்பகுதியில் கல்வி பயில விரும்பும் மாணவர்கள், அது தொடர்பான அரச கல்வி நிறுவனம் ஒன்றின் அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், ஒருவர் கனடாவிற்கு வருவது சுலபம். சிறிலங்காவிற்குப் போவது வில்லங்கமான காரியம்.

Sunday Times போன்ற பத்திரிகைகள் தமிழீழத்தில் திட்டமிட்டுக் குடியேற் றப்பட்ட சிங்களக் குடியேற்றக் கிராமங்களைக் குறிப்பிடும் போது, அவற்றை எல்லைக் கிராமங்கள் என்றே குறிப்பிடுகின்றன.

இது அவர்களை அறியாமலேயே இலங்கைத் தீவில் இரண்டு நாடுகள் இருப்பதை ஒத்துக் கொள்வதாக இருக்கிறது.

மணலாற்று சிங்கள (குடியேற்ற)க் கிராமங்களுக்கு அதிகளவு இராணுவ பாதுகாப்புத் தேவை என்று இந்தப் பத்திரிகைகள் எழுதும்போது, மணலாற்றுக்கு வடக்குப் பக்கம் வடதமிழீழம். அந்தப் பக்கம் தமிழீழம் இருப்பதை ஒப்புக்கொண்டு விடுகிறார்கள்.

இரண்டு நாடுகளின் எல்லையில் இருக்கும் கிராமங்களையே 'எல்லைப் புறக் கிராமங்கள்' என்று அழைக் கிறார்கள்.

சந்திரிகாவிற்கும் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட இனப்பிரச்சனை சம்பந்தமான உடன்பாடு இப்படிக் கூறுகிறது.

".... the party in opposition will not undermine any discussions or decisions between the party in government and any other party, group or person, including the Liberation Tigers of Tamil Ealam, aimed at resolving the ethnic conflict, if these discussions and decisions..."

"இனப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் நோக்கோடு நடாத்தப்படும் பேச்சு வார்த்தைகள் அல்லது முடிவுகள் இவற்றையிட்டு ஆளும் கட்சி தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட, கட்சிகளுடனோ அல்லது குழுக்களுடனோ அல்லது தனிநபரோடு பேசி எடுக்கும் முடிவுகளை எதிர்க்கட்சியில் இருக்கும் கட்சி கெடுக்கக்கூடாது."

சிறிலங்காவில் இருப்பது இனப்பிரச்சனை அல்ல. அது பயங்கரவாதப் பிரச்சனை என்று சிங்கள – பௌத்த பேரினவாதிகள் புலம்பிக்கொண்டிருக்கும்போது, சந்திரிகா – ரணில் விக்கிரமசிங்கா இருவருக்கும் இடையில் காணப்பட்ட உடன்பாடு – எழுத்து மூலம் காணப்பட்ட உடன்பாடு, இலங்கையில் இருப்பது இனப் பிரச்சனைதான் (Ethnic conflict) எந்தச் சந்தேகத்திற்கும் அப்பால் உறுதிப் படுத்தியுள்ளது.

அதுமட்டும் அல்லாமல், சந்திரிகா – ரணில் இடையிலான உடன்பாடு மூன்றாவது நாடான பிரிட்டனின் தலையீட்டாலேயே உருவாகி இருப்பது, இந்த உடன்பாடு சம்பந்தமாக மொத்தம் மூன்று நாடுகள் இருப்பதையும் நிரூபித்துள்ளது. இலங்கையில் இருப்பது, "இனப்பிரச்சனை அல்ல பயங்கரவாதப் பிரச்சனையே" என்று ஓயாது ஊழையிடும் Sunday Times, Sunday Laeder, The Island பத்திரிகைகளுக்கு இது பலத்த அடி என்பது சொல்லாமலே விளங்கும்.

இந்த உடன்பாட்டால் இனப்பிரச்சனை தீர்த்துவைக்கப்படுமா? விடுதலைப் புலிகளுடன் சிறிலங்கா அரசு பேச்சு வார்த்தையில் ஈடுபடுமா? இல்லையா என்பதல்ல கேள்வி.

ஆயுதங்களை கீழே வைத்தால்தான் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்று வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் மாரித் தவக்கை மாதிரி கத்திக் கொண்டிருந்தாலும், "ஆயுதங்களைக் கீழே போடுதல் போன்ற நிபந்தனைகள் என்ற பேச்சுக்கே இடமில்லை" என விடுதலைப் புலிகள் மீண்டும் தெளிவு படுத்தியுள்ளார்கள்.

எனவே சந்திரிகா – ரணில் விக்கிரமசிங்கா இருவருக்கும் இடையிலான உடன்பாடு, சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைக்கு அடிகோலுகிறதோ இல்லையோ இலங்கையில் உள்ளது இனப்பிரச்சனை, பயங்கரவாதப் பிரச்சனை அல்ல என்பதை ஒத்துக் கொண்டுள்ளது.

இது இலங்கைத் தீவு = சிறிலங்கா + தமிழீழம்

இரண்டையும் உள்ளடக்கிய இரண்டு நாடுகள் என்ற அசைக்க முடியாத யதார்த்தத்தை தெளிவாக்கி உள்ளது. ✷

www.tamilarangam.net



# சிறிலங்கா அரசின் வெறியாட்டத்தை எப்படியாவது நிறுத்த வேண்டும்

## -டென்மார்க் றேடியோவிற்கு பாடசாலை ஆசிரியை டோரிற் புறோசிலியூஸ் அளித்த சூடான பேட்டி

**நவாலி தேவாலயக் குண்டு வீச்சு; நாகர்கோவில் பாடசாலை மீதான குண்டு வீச்சு விவரணப் படங்களை தொலைக்காட்சி மூலம் பார்த்தேன். நான் ஒரு ஆசிரியை என்ற முறையிலும், ஒரு தாய் என்ற முறையிலும், எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மனிதப்பிறவி என்ற முறையிலும் இவற்றைப் பார்த்த பின்னர் நான் எடுத்த முடிவு:**

21.03.1997 மாலை 5.35இற்கு டென்மார்க் றேடியோவில் (FYN) நீங்கள் இதுவரை காலமும் கேட்டிராத பாடல் ஒன்று கேளுங்கள் என்ற முஸ்தீபுடன்

"நான் அழவேண்டும்
நான் மனம் விட்டு
அழ வேண்டும்
உலகமே சட்டை செய்யாதிருந்த
ஒரு நாளில்
யூலை 9ம் திகதி நவாலி தேவாலயம்,
யாழ்ப்பாணத்தில் நடந்த
படுகொலை பற்றி யாருமே
எதுவுமே சொல்லாத போது......
நான் மனம் விட்டு
அழுதே ஆக வேண்டும்"

என்ற Garth Hewitt இன் அழகான, ஆழமான நெஞ்சை உருக்கும் ஆங்கிலப்பாடலைத் தொடர்ந்து,

"ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப் பட்டனர். நூற்றுக்கணக்கான சிறார்கள் கொல்லப்பட்டும் சித்திரவதை செய்யப் பட்டும், பல பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டும் பல்லாயிரக்கணக்கானோர் தமது அங்கங்களை இழந்தும் உள்ளனர். இது பொஸ்னியாவிலோ அல்லது ஆபிரிக்காவிலோ நடந்தது அல்ல. டென்மார்க் மக்கள் அறியாத அல்லது வேண்டுமென்றே அவர்களுக்கு மறைக்கப்பட்ட ஒரு யுத்தம் பற்றி டோரிற் புறோசிலீயோஸ் உங்களுடன் உரையாட இருக்கிறார்" என்று நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ரோபன் (Torpen Pouelsen) சொல்லிவிட்டு கேள்வியை ஆரம்பிக்கிறார்.

கேள்வி: யுத்தம் என்று சொல்கிறார்களே....... அது என்ன யுத்தம்? டென்மார்க் அறியாத யுத்தமா? அது என்ன?

பதில்: நான் சொல்லப்போகும் யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா அரசு நடத்தும் யுத்தமாகும்.

கேள்வி: நாங்கள் இங்கே கேள்விப்படுகிறோம், தமிழீழ விடுதலைப் புலிகள் என்றும் சிறிலங்கா அரசு என்றும். உண்மையில் என்னதான் பிரச்சனை?

பதில்: பிரச்சனை என்பது, டென்மார்க் உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு என்ன நடக்கிறது என்பது தெரியாமல் இருப்பதுதான். பத்திரிகையாளர்களோ அல்லது அரசு சார்பற்ற நிறுவனங்களோ யுத்தம் நடத்தும் பிரதேசங்களுக்கு அனுமதிக்கப்படுவதில்லை. அத்துடன், உதவிசெய்யும் சர்வதேச நிறுவனங்கள் கூடத் தடை செய்யப்பட்டுள்ளன. உதவிசெய்யும் நிறுவனங்களிடம் பணம் இருந்தும் உதவி செய்ய முடியாத நிலை. என்ன நடக்கின்றது என்று தெரியாத நிலைதான் உண்மையில் பிரச்சனை.

கேள்வி: உங்களுக்கு எப்படித் தெரியும் அங்கே நடக்கும் பிரச்சனைகள் பற்றி?

பதில்: நான் வசிக்கும் நகரமான Svenborg இல் வாழும் தமிழ் நண்பர்கள் மற்றும் டென்மார்க்கில் வாழும் ஏனைய தமிழ் நண்பர்களூடாகவும் நான் ஓரளவு அறிந்திருந்தேன். எனது பாடசாலையில் க.ஆதவன், தமிழ் ஈழம் குழு டென்மார்க், சுவிர்சலாந்து விடுதலைப்புலிகள் கிளை இவர்களுக்கூடாக 17-03-97 இல் ஐ. நா முன்னிலையில் நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாபெரும் பேரணியில் கலந்து கொள்ளுமாறு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. நான் அதை ஏற்றுக்கொண்டு ஐந்து தினங்கள் ஜெனிவாவில் ஐ. நா. சபையில் மனித உரிமைகள் சம்பந்தமாகக் கடமையாற்றும் பலருடன் உரையாற்றினேன். பேரணியிலும் பங்குபற்றி உரையாற்றினேன். குறிப்பாகத் தமிழ் மக்கள் பிரச்சனையில் அக்கறையுள்ளோர் பலருடன் நான் கலந்துரையாடினேன். மனித உரிமைக்கான ஐ. நா பொறுப்பாளரிடம் தமிழ் மக்களுக்கு நடந்த அநீதிகள் பற்றிய ஒரு ஆவணப்பத்திரம் கையளிக்கப்பட்டது. அந்த ஆவணத்தை நான் பலமுறை படித்தேன். ஆவணத்தைத் தயாரித்தவர்களிடம் உரையாடினேன். என் நெஞ்சில்

**அப்பாவிச் சிறார்களைக் கொல்லாதீர்!**
**சர்வதேச உலகமே கண் விழி!**
**மனித உரிமைகளுக்கான,**
**தொடர்பு ஊடகங்களை**
**சிறிலங்கா அரசு நிறுத்துவது**
**மிலேச்சத்தனமானது !**

கனன்ற சோகமும் அவர்கள் கண்களில் தெரிந்த உண்மையும் மீண்டும் மீண்டும் என்னைச் சிந்திக்கத் தூண்டின. நான் பல உண்மையான விடையங்களை அறிந்து கொண்டேன். அந்த ஆவணம் செம்மையாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. வடக்குக் கிழக்கில் நடந்த கொடுமையான சம்பவங்களின் நிகழ்காலக் குறிப்புக்களையும் அது உள்ளடக்கி இருந்தது.

கேள்வி: உலகமெங்கும் கொடூரமான பிரச்சனைகள் நடக்கின்றன. பொஸ்னியா, ஆபிரிக்கா அங்கெல்லாம்தான் பிரச்சனை. ஏன் நீங்கள் சிறிலங்காப் பிரச்சனையைத் தேர்ந்தீர்கள்?

பதில்: நான் நவாலித் தேவாலயத்தில் நடந்த குண்டுவீச்சு, நாகர்கோவில் பள்ளிச் சிறார்கள்மேல் நடந்த குண்டுவீச்சு பற்றிய ஒரு விவரணப்படத்தை தொலைக் காட்சிமூலம் நண்பன் ஆதவன் மூலம் பார்த்தேன். புதை குழிகளில் இருந்து துண்டுதுண்டாய்ப் பள்ளிச்சிறார்களைப் பொறுக்கிய கொடுமையை என்னால் தாங்க முடியவில்லை. தலையில்லா முண்டமாய் ஒரு குழந்தையை ஒரு தாய் இடிபாடுகளுக்குள் பொறுக்குகிறாள். இவ்வளவு கொடூரமான மனித உடற்சிதைபாடுகளையும் அவலத்தையும் தசைகளையும் இரத்தத்தையும் நான் என் வாழ்நாளில் எந்த யுத்தத்திலும் கண்டதில்லை. நான் ஒரு ஆசிரியை என்ற முறையிலும், ஒரு தாய் என்ற முறையிலும் எல்லாவற்றிற்கும் மேலாக நானொரு மனிதப்பிறவி என்ற முறையிலும் என்னால் இவற்றைப் பார்த்த பின்னரும் சும்மா இருக்க முடியவில்லை. ஏதாவது செய்யவேண்டும் என்ற ஆவல் ஆத்மாவை அரித்துக் கொண்டிருந்தது. பிள்ளைகளைக் கொல்வதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. மனிதகுலம் பரவியிருப்பது பிள்ளைகளால்தான்.

அங்கே கொல்லப்பட்டவர்கள் எனது மூதாதையரின் பேரன், பூட்டன், கொள்ளுப்பேரனாகக் கூட இருக்கலாம் என்று என் இதயம் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறது. இதை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்ற ஆதங்கத்தில்தான் நான் இதில் ஈடுபட்டேன். சிறிலங்கா அரசின் வெறியாட்டத்தை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்பது என்முடிவு.

கேள்வி: நீங்கள் உண்மையாகத்தான் இயங்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்பது எப்படி உங்களுக்கு உறுதியாகத் தெரிகிறது?

பதில்: நான் உறுதியாக நினைக்கிறேன், நான் அநீதிக்கு எதிராக நிற்கிறேன் என்று. ஏனெனில், எனது இயக்கம் முழுதும் மனிதஉரிமை சம்பந்தமானது. குழந்தைகளைக் கொல்வோர், பாடசாலைமீது குண்டுவீசுவோர், தேவாலயம் மீது குண்டு வீசுவோர், நூல்நிலையத்தை அழிப்போர் எப்படி மனிதராக, உண்மையுள்ளவராக இருக்க முடியும்? மனிதனின் அடிப்படை உரிமைகளான உணவு, உடை, உறையுள் இம்மூன்றும் கிடைப்பதற்கு வழிவகை செய்வதுதான் எனது நோக்கம். இவைகளைக்கூடத் தமிழ்ப் பகுதிகளில் உரியவகையில் கிடைக்க வழி செய்யவில்லை சிறிலங்கா அரசு. தாங்கள்தான் கொடுக்காது விட்டாலும், கொடுக்கும் எங்களையாவது தடுக்காமல் இருக்கலாம் அல்லவா? இப்படி இயங்கும் ஒரு அரசை மிலேச்சத்தனமான அரசு என்றுதான் சொல்லுவேன்.

கேள்வி: சிறிலங்கா அரசும் பிரச்சாரம் செய்கிறது. அதை எதிர்ப்பவர்களும் பிரச்சாரம் செய்கிறார்கள். இந்த இரண்டு பிரச்சாரங்களுக்கிடையிலும் சிறிலங்கா அரசு மிலேச்சத்தனமானது என 100% சொல்கிறீர்களா? எப்படி?

பதில்: ஆம்! நான் இலண்டனிலுள்ள தமிழர் மனித உரிமைகளுக்காகப் பணிபுரியும் Deirdre, Eliza mann ஆகியோருடன் கதைத்தேன். அவர்கள்தான் இந்த ஆவணப் பத்திரத்தைத் தயாரிப்பதில் முன்னின்று உழைத்தவர்கள். அவர்களில் ஒருவரான Deirdre அண்மையில் இலங்கைக்குச் சென்று வந்தவர். அவரை வட கிழக்குக்குச் செல்ல இலங்கை அரசு அனுமதிக்கவில்லை.

நான் அவரை நம்புகிறேன். இந்த ஆவணப்பத்திரம் உண்மையான பதிவேடு என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

கேள்வி: நீங்கள் எவ்வாறு உண்மையைச் சொல்லப் போகிறீர்கள்?

பல டெனிஸ் பத்திரிகைகளும் தொடர்பு சாதனங்களும் கண்களை மூடிக் கொண்டிருக்கின்றன எனச் சொல்லும் நீங்கள் இதை எப்படிச் சாதிக்கப் போகிறீர்கள்?

பதில்: டென்மார்க் அரசு சார்பில் அகதிகளைத் திரும்ப அனுப்புவது சம்பந்தமாக ஒரு குழு இலங்கைக்குச் சென்றது. அவர்கள் எந்தெந்த இடங்களைப் பார்வையிட்டார்கள், யார் யாரைக் கண்டார்கள் என்பது கேள்விக்குறியே! அரசு அவர்களை உண்மையை அறிய அனுமதித்ததா? எல்லாமே ஒருதலைப்பட்சமாக இருக்கிறது. இந்நிலையில் நானொரு சிறிய காலடியை எடுத்து வைக்கிறேன். இது ஒரு ஆரம்பம் மட்டுமே! இன்னும் எவ்வளவோ பணிகள் இருக்கின்றன. இலங்கை சென்று வந்த குழுவின் அறிக்கையையும், நான் வைத்திருக்கும் இந்த ஆவணத்தொகுப்பையும் ஒப்பிட்டுப் பார்க்குமாறு டெனிஸ் அரசை நான் கோருவேன். நான் வாழும் பகுதியில் உள்ள எமது பத்திரிகைகளில் இது பற்றிய விரிவான கட்டுரை ஒன்று எழுத உள்ளேன். நீங்கள் சற்றுமுன் கேட்ட பாடலைப்போல் ஒரு பாடல் தொகுப்புக்கொண்ட CD ஒன்றை டெனிஸ் மொழியில் வெளியிடும் திட்டமும் ஒன்றுண்டு. டெனிஸ் தொடர்பு சாதனங்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு உண்மை நிலையை உலகுக்குக் காட்டுங்கள் எனக் குரல் கொடுப்பேன்.



நிகழ்ச்சி தயாரிப்பாளர்: மனித உரிமைக்காகவும், உண்மைக்காகவும் குரல் எழுப்பும் உங்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள். ✳

நன்றி : உலகத்தமிழர்

www.tamilarangam.net



# 19.05.97 அன்று ஓமந்தை - நெடுங்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் நடந்த சமரில் வீரமரணத்தைத் தழுவிய மாவீரர்களின் இதுவரை கிடைக்கப்பட்ட விபரம்



1. நாவண்ணன் யோகராசா கிருபாகரன்
திரியாய் (த.மு.கைவெளி, புதுக்குடியிருப்பு)

2. கப்டன். அருமைராசு
சிறீமுருகன் சிறீதரன்
3, புதிய கோயிலங்குளம்,
பம்பைமடு, வவுனியா.

3. லெப். நெடியோன்
கணேசன் ரவிச்சுந்திரன்
அப்பிதாவளை ,(த.மு. 01ஆம் கொலனி
ரெட்பானா, விஸ்வமடு)

4. 2ம் லெப். முத்துச்செழியன்
முத்துவேலு செல்வராசா
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்

5. மேஜர் சிறீகாந்த்
தர்மராசா பவளக்காந்தன்
பதநாயக்க மாவத்தை, சுந்தளாய்
(த.மு. C/O வி. யோகராஸ், ரகமதி கொலனி,
மூங்கிலாறு, புதுக்குடியிருப்பு).

6. 2ம் லெப். திருமலையான்
ஆறுமுகம் மகாதேவன்
வல்லிபுரம், புதுக்குடியிருப்பு

7. லெப். மதியழகன்
ஜெயரத்னம் சுதர்சன்
50/01 1வது லேன், பருத்தித்துறை
( த.மு. 3ம் வாட், புதுக்குடியிருப்பு).

8. லெப். ஜெகன்
செல்வராசா சிறீதரன்
உசன், மிருசுவில்
(த.மு. 12 மைல் கட்டை, விஸ்வமடு)

9. 2ம் லெப். வைகுந்தன்
சிவஞானம் சுந்திரசேகரம், மட்டக்களப்பு

10. 2ம் லெப். நெஞ்சப்பன்
சிவானந்தம் பரமேஸ்வரன்
திருகோணமலை
(த.மு. றோயல் முகாம், புதுக்குடியிருப்பு)

11. 2ம் லெப். அமலா
கதிரவேலு ருக்மணிதேவி
யாழ்ப்பாணம்
(த.மு. 4வது வட்டாரம்,
கோணாவில், புதுக்குடியிருப்பு).

12. லெப். செல்வகுமார்
முத்துராசா ஜீவராசா, வவுனியா

13. மேஜர் தகிர்ச்செல்வன்
அந்தோனி கறுாஸ் தங்கத்துரை
செல்வபுரம், முல்லைத்தீவு.

14. திருவேங்கை
சுந்தையா சுசியகுமார் , வரணி

15. லெப். அறிவு
உபாலி சிவஞானமூர்த்தி
வத்தவளை, புத்தளம்.

16. லெப். கேணல் அங்கதன் / ராஜா
சிவசுப்ரமணியம் ரத்னகுமார், யாழ்ப்பாணம்.

17. சுதசேரன்
ராமச்சுந்திரன் ரதீஸ்குமார், திருகோணமலை
(த.மு. கணேஸ் கொலனி,
வல்லிபுரம், புதுக்குடியிருப்பு)

18. கப்டன் யாழ்மொழி
கிருஷ்ணபிள்ளை புஷ்பா, நெடுங்கேணி

19. லெப். வானதி
சுந்தசாமி காந்திமதி
105 உருத்திரபுரம், கிளிநொச்சி

20. அகிலானந்தம்
வேலாயுதம் ரமேஷ்
யாழ்ப்பாணம். (த.மு. தேவிபுரம், முல்லைத்தீவு)

21. லெப். கேணல் ரத்தி
கிருஷ்ணபிள்ளை சுபாஷினி
யாழ்ப்பாணம்,(த.மு. இராமநாதபுரம், வட்டக்கச்சி)

22. கப்டன் தயாழினி
சின்னத்துரை இராஜேஸ்வரி, வவுனியா.

23. உமாநிதி
கணபதிப்பிள்ளை ஜமுனா, யாழ்ப்பாணம்
(த.மு. தியாகராஜா கொலனி,
இரணைமடு, புதுக்குடியிருப்பு).

24. ரகுபரன்
தங்கராசா அழகுகுட்டி, திருகோணமலை.

25. கப்டன் விஜி
கிருஷ்ணபிள்ளை சிவகுமார், யாழ்ப்பாணம்.

26. லெப். ரவி
நடராசா சிவகுமார், யாழ்ப்பாணம்.

27. கண்ணன்/தர்மராசா
தங்கத்துரை தெய்வன்
தோப்பூர், மூதூர்.

28. வரன்
ஞானப்பிரகாசன் ஜோன் சத்தியசீலன்
யாழ்ப்பாணம்.

29. மேஜர் செம்பியன்/மது
கணபதிப்பிள்ளை ரமேஷ் ,யாழ்ப்பாணம்.

30. துரைவீரன்
இராசநாயகம் சிறீசுதன்
யாழ்ப்பாணம்
(த.மு. 27/131 நிர்வாகசேவை, புளியங்குளம்).

31. 2ம் லெப். தமரைக்கண்ணன்
வேலுப்பிள்ளை உதயகுமார்
01வது கண்டம், முத்தையன்கட்டு.

32. இசைவாணன்
விக்ரர்லியோன் ஜஸ்ரின்லியோன்
இரத்தினபுரி (த.மு. குறுந்தாரணி
யாழ், மாயவனூர், வட்டக்கச்சி).

33. மேஜர் அரந்திரூபன்
சின்னத்தம்பி இராஜேஸ்வரன்
யாழ்ப்பாணம்.

34. கப்டன் டொமினிக்
சுப்ரமணியம் சிதம்பரநாதன், யாழ்ப்பாணம்

35. உலவிந்தன்/புலியின்பன்
காந்தலிங்கம் சிவநாதன்
முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால்

36. தமிழ்பித்தன் /வர்மிலன்
சுந்தையா இராமச்சுந்திரன், மாதகல்.
(த.மு. முத்தையன்கட்டு, ஒட்டிசுட்டான்)

37. கார்முகிலன்
அழிகர் நவநீதன், வவுனியா.

38. மேஜர் குட்டி
சண்முகம் ஈஸ்வரன், யாழ்ப்பாணம்.

39. 2ம் லெப். கவியழகன்
சூசைநாயகம் கிங்ஸ்லி உதயன், யாழ்ப்பாணம்.

40. லெப். பழனி
இராமலிங்கம் பஷான்
சுதந்திரபுரம், உடையார்கட்டு.

41. தங்கைச்செல்வன்/தனரூபன்.
இஸ்ரனிசுலாஸ் தினேஸ்வரன்.
யாழ்ப்பாணம் ,
(த.மு. சிறீஸ்கந்தபுரம், கிளிநொச்சி).

42. சுடர்தீபன்
மதன்மோகன், நிக்கரி, ஒட்டிசுட்டான்

43. வன்னிச்செம்மல்
தங்கவேல் தயாகரன்
அம்பாறை (த.மு. கற்சிலைமடு, ஒட்டிசுட்டான்).

44. கப்டன் மாறன்
நடேஸ் ஜெயமோகன், யாழ்ப்பாணம்.

45. 2ம் லெப். கோதைவாணன்
சிவானந்தன் சிவா, யாழ்ப்பாணம்

46. 2ம் லெப். அகவாணன்
பாலசிங்கம் நிர்மலன், யாழ்ப்பாணம்.

47. தமிழ்மன்னன்
கணபதிப்பிள்ளை சிறீகரன்
கட்டவிநாயகர் கோவிலடி, முள்ளியவளை

48. இயல்வாணன்
சுந்தசாமி சுரேந்திரன், யாழ்ப்பாணம்
(த.மு. குளமுறிப்புறு, ஒட்டிசுட்டான்).

49. லெப். தணிகைவேலன்/மாவி
அருணகிரிநாதன் ஜெயகரன்
(த.மு. தர்மபுரம் கிழக்கு, தர்மபுரம்.)

50. குகன்
ஜெயபாலன் ரமேஷ், யாழ்ப்பாணம்
(த.மு. புகையிரதவீதி அருகாமை, மாங்குளம்).

51. லெப். மிதுனன்
சுப்ரமணியம் தேவராசா
யாழ்ப்பாணம் (த.மு. தேவிபுரம், முல்லைத்தீவு).

52. மேஜர் வர்மன்
சுப்பையா யோகானந்தன்
திருகோணமலை (த.மு. யோகபுரம், மல்லாவி).

53. 2ம் லெப். தில்லைநம்பி
வல்லிபுரம் ராஜ்கரன், யாழ்ப்பாணம்.

54. லெப். அறியவன்
தர்மலிங்கம் சிவகரன், திருகோணமலை
(த.மு. வற்றாப்பளை, முல்லைத்தீவு)

55. 2ம் லெப். செல்லக்கிளி
செபஸ்தியாம்பிள்ளை ரஜனிகாந்தன்
மந்துவில், புதுக்குடியிருப்பு

56. திரையான்
மாரிமுத்து முருகைராசா
யாழ்ப்பாணம்
(த.மு. பொலிஸ் நிலையம் அருகாமை, மாங்குளம்).

www.tamilarangam.net

அறிவாற்றலும் தன்னலமற்ற மக்கள் சேவையும் நற்புண்புகளும் நிறைந்த, யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசான் துரைராசா அவர்களின் இதயம் கனத்த 3ஆம் ஆண்டின் நினைவுகளுடன், அவர் மறைந்தபோது தமிழீழத்தில் வெளியிடப்பட்ட கட்டுரையை இங்கு மறுபிரசுரம் செய்கின்றோம்.

# "எமது மண்ணுக்கே

''இங்கு அஞ்சலி உரை நிகழ்த்தியவர்கள் பேராசிரியர் துரைராசாவின் ஆன்மா சொர்க்கத்திற்குப் போகவேண்டும் என்று கடவுளை வேண்டினர். ஆனால், நான் அப்படிக் கேட்கமாட்டேன். பேராசிரியர் துரைராசா எமது மண்ணுக்கே திரும்ப வர வேண்டும் என்றே கடவுளை வேண்டுகின்றேன்.''

மறைந்த பேராசிரியர் துரைராசா அவர்களின் இறுதிச்சடங்கின்போது அவரின் சொந்தக் கிராமமான வதிரியைச் சேர்ந்த ஓர் வயோதிபர் கூறிய அர்த்தம் நிறைந்த வரிகளே மேலுள்ளவையாகும்.

பேராசிரியரின் தன்னலமற்ற மக்கள் சேவைக்கு – நற்பண்புகள் நிறைந்த அப்பேராசானை மக்கள் மதித்து – அன்புகாட்டிய முறைமைக்கு – இந்த முதியவரின் வார்த்தைகள் நல்ல உதாரணம். இது தனியொருவரின் கருத்தல்ல. தமிழினத்தின் ஒட்டுமொத்தக் குரலும் – உணர்வும் இதுதான். இந்த உணர்வை பேராசிரியரின் பிரிவுபசார நிகழ்ச்சிகளின்போதும், பின்னர் அவரது மரணச்சடங்குகளின் போது பொது மக்களும் – மாணவர்களும் – சக கல்விமான்களும் – அவருக்குச் செலுத்திய இறுதி மரியாதையிலும் கண்டுகொள்ள முடியும். இவை எல்லாவற்றுக்கும் மகுடம் சூடுவதுபோல, தமிழீழத் தேசியத் தலைவரின் பாராட்டையும் கௌரவ விருதையும் பேராசிரியர் பெற்றுக்கொண்டார். பிரிவுபசாரத்தின்போது பேராசிரியரது பணியைப் பாராட்டி ஒரு செய்தியையும், பேராசிரியர் மறைந்தபோது அவருக்கு அஞ்சலி செய்து ஒரு இரங்கற் செய்தியையும் வெளியிட்டு, பேராசிரியருக்கு ஒரு அதி உச்சக் கௌரவத்தைத் தேசியத் தலைவர் கொடுத்திருந்தார்.

ஈழத்தமிழினம் கல்விப் பாரம்பரியம் மிக்க ஒரு மக்கள் இனம் என்பதைப் பொதுவாக அனைவரும் ஏற்றுக் கொள்வர். உலகம் போற்றும் கல்விமான்கள் பலரை தமிழீழ அன்னை பெற்றெடுத்துள்ளாள் என்பதும் மறுக்கப்பட முடியாத உண்மை.

ஆனால், இவர்களுள் எத்தனை பேர் பிறந்த மண்ணுக்குச் சேவை செய்தார்கள்? எத்தனை பேர் தனது இனத்தின் ஒட்டுமொத்த வாழ்வை உயர்த்திவிட தன்னலம் பாராது பாடுபட்டார்கள்? அறிவின் உச்சத்தில் பணிவைக் கடைப்பிடித்து மக்கள் சேவகனாக – மக்களில் ஒருவனாக – வாழ்ந்த மண்பற்றுள்ள பேராசான்கள் எத்தனைபேர்?

இந்த வினாக்களுக்கு விடையாக "பேராசிரியர் துரைராசா!" என்று எல்லோரும் ஒருமித்துக் கூறுவர். அந்தளவுக்கு பேராசிரியரின் அறிவும் – பண்பும் – பணியும் – தனிப்பட்ட வாழ்வும் – மேன்மையுடையதாக அமைந்திருந்தன.

தமிழ் மக்களின் சொத்துக்களில் ஒன்றாகிய கல்விக்குப் பேராபத்து நேர்ந்த ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் யாழ். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவியை ஏற்றுக்கொண்ட அவர், தமிழரின் உயர்கல்விக்குப் புத்துயிர் ஊட்டி - புது இரத்தம் பாய்ச்சியிருந்தார் என்பது வரலாற்று உண்மை.

அவர் வகித்த பதவிகளும் அவருக்கு வழங்கப்பட்ட ஊதியங்களும் சிங்கள அரசின் கைகளில் இருந்தபோதும், தமிழீழத் தேசத்திற்கு – தமிழ் மக்களுக்கு – சேவை புரிவதற்கு அவற்றை ஒரு தடையாகச் சொல்லி இவர் தப்பிக்க முயன்றதில்லை. அவர் கலந்துகொண்ட எல்லாக் கூட்டங்களிலும் – எல்லாக் கலந்துரையாடல்களிலும் – எல்லா நிகழ்வுகளிலும் – தமிழினத் துக்கெதிரான ஒடுக்குமுறை பற்றியும் தமிழீழத் தேசியம் பலம்பெற வேண்டிய அவசியம் பற்றியும், தெளிவாகவும் வெளிப்படையாகவும் தனது கருத்தை எடுத்துக் கூறுவார்.

நூல் வெளியீட்டு விழாவிலும் தமிழீழத் தேசியம் பற்றிப் பேசுவார் –

கல்வி மற்றும் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட கூட்டங்களிலும் தமிழீழத் தேசியம் பற்றிப் பேசுவார் –

சக கல்விமான்கள் மற்றும் வேற்று இன நண்பர்களுடன் கலந்துரையாடும்போதும் தமிழீழத் தேசியத்தை வலியுறுத்திப் பேசுவார் –

ஏன்! அவருக்கு நடந்த பிரிவுபசாரக் கூட்டத்திலும் அதையேதான் பேசினார்.

தமிழீழத்தில் நடந்த கூட்டங்களில் மட்டுமல்ல, சிங்கள தேசத்தில் – கல்விமான்கள் மத்தியில் – நடைபெற்ற கலந்துரையாடல்களிலும் அதையேதான் பேசினார். வெளிநாடுகளில் நடந்த சந்திப்புக்களிலும் அதையேதான் வற்புறுத்தினார்.

தமிழரின் சுயநிர்ணய உரிமை பற்றியும், தமிழீழ தேசியத்தைப் பலப்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும் பேசுவதற்கு ஒருபொழுதும் அவர் அஞ்சியதுமில்லை – பின்வாங்கியது மில்லை.

அதேவேளை, உலகளாவிய ரீதியில் தத்தமது வாழ்க்கைச் சக்கரங்களைச் சுழற்றுவதற்குத் திண்டாடும் ஏழை மக்களையும் அவர் அடிக்கடி நினைவூட்டிப் பேசி, அந்த மக்களின்பால் தான் வைத்திருக்கும் கரிசனையையும் எடுத்துரைப்பார். 500 கோடி உலக சனத்தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர் பட்டினிக்கு முகங்கொடுத்து வாழப் போராடுகின்றனர் என்று எடுத்துக்கூறி, அந்தத் துர்ப்பாக்கிய நிலை எமது மக்களுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்று அறிவுரை கூறுவார்.



"அரசு திட்டமிட்டு தமிழரின் கல்வியை அழிக்க முனைகின்றது. ஆனால், தமிழினத்தின் கல்வியை அழியவிடாது பாதுகாப்பது எங்களின் கடமை" என்று, வதிரியில் நடந்த பிரிவுபசார விழாவில் பேசிய பேராசிரியர் அவர்கள்.........

"எமது இயற்கை வளத்தையும் கல்வியால் பெறப்படும் மூளைவளத்தையும் கொண்டு எமது மனித வளத்தையும் சரியாக வளர்த்தெடுத்து – பயன்படுத்தி – எமது தேசத்தின் பொருண்மியத்தை வளர்க்க வேண்டும்" என்று தேசியப் பிரக்ஞையுடன் பேசினார். அத்துடன் நின்று விட்டாரா .....? இல்லை.

"கிராமங்கள் வளர்ந்தால்தான் நாட்டின் பொருண்மியம் வளரும்" என்றார்.

"ஏழை மக்களின் வாழ்வு உயர்ந்தால்தான்



கிராமம் வளரும்" என்றார்.

"இந்த ஏழை மக்களின் வாழ்வை வளம்படுத்த சனசமூக நிலையங்கள் பாடுபட வேண்டும்" என்றும் அறிவுரை கூறினார்.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தி நியாயம் பற்றி சிங்களத் தேசத்தில் சிங்களப் புத்திசீவிகள் மத்தியி விவாதிக்கும்போது, எதிராளிகளி எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டே அல்லது தன்னலத்தை அடிப்படையாக கொண்ட காரணங்களுக்காகவோ விட்டு கொடுத்ததோ அல்லது 'சளாப்பி கதைத்ததோ இல்லை. இந்த நேர்மை – தெளிவான அவரது அரசிய நிலைப்பாட்டை பேரினவாத உணர்வுட உள்ள சிங்கள இனத்தின் புத்திசீவிக கூட மதித்தனர்.

பிரிவுபசாரக் கூட்டம் ஒன்றில் பேசும்போ பேராசிரியர் ஒரு சம்பவத்தை நினை கூர்ந்தார்.

> "..எமது இனத்தின் விடுதலைக்காகத் தங்களது உயிரைத் தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்கும் புலிகளுக்கு, நான் தலை சாய்த்து வணக்கம் செலுத்த விரும்புகின்றேன்""
>
> *- பேராசிரியர் துரைராசா*

ஒருநாள் கத்தோலிக்கச் சிங்களவரா ஒரு கல்விமான் பேராசிரியரிட சொன்னாராம் –

"சிங்களவர் மத்தியில் கத்தோலிக்கரா நாங்கள் மிகச் சிறுபான்மையா இருக்கின்றோம். அதனால் பௌத் சிங்களவர்கட்கு விட்டுக்கொடுத்து சகிப்புத்தன்மையுடன் இரண்டாம் நிலை

## பேராசிரியர் துரைராசா அவர்களின் கல்விச்சேவை பற்றி.......

"எமது இனத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கல்வி ஆதாரமானது; எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அடித்தளமானது. நீண்ட காலமாகவே எமது கல்வி வாழ்வைச் சிதைத்துவிட எதிரியானவன் முனைந்து வருகிறான். இதனால் தமிழரின் கல்வி பாரதூரமான அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. சரிந்து கொண்டிருக்கும் எமது கல்வித்துறையை நிமிர்த்திவிட வேண்டும் என்ற இலக்கில், பேராசிரியர் துரைராசா அவர்கள் அரும்பாடுபட்டார். எத்தனையோ இடையூறுகளுக்கும் மத்தியில் துணிந்து செயலாற்றினார். எதிரியின் போர் அழுத்தங்களாலும் அனர்த்தங்களாலும் யாழ்ப்பாண உயர் கல்விப்பீடம் செயலிழந்து போகாதவண்ணம் அவர் ஆற்றிய அருந்தொண்டு மிகவும் பாராட்டுக்குரியது. இது அவரது தேசப்பற்றுக்கும் மக்கள் நேயத்திற்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு"

தமிழீழத் தேசியத்தலைவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திரும்ப வரவேண்டும்"

பிரசைகளாக, அமைதியாக வாழக் கற்றுக் கொண்டுள்ளோம். அதுபோல நீங்களும் (தமிழினம்) விட்டுக்கொடுத்து அமைதியாக வாழலாம்தானே" என்று.

இதற்குப் பதில் கூறும்போது, சிங்களப் பேரினவாத அரசுகளின் தமிழின விரோத நடவடிக்கைகளை பேராசிரியர் விளக்கி விட்டு,

"தமிழர் ஒரு தேசிய இனம் (Nation); அவர்களுக்கு என்றொரு தனித்துவமான நிலமுண்டு – அதேபோல மொழி உண்டு – பண்பாடுண்டு – பொருண்மிய

> "இன உரிமைக்காகக் குரல் கொடுப்பதற்கு யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை"
>
> *-பேராசிரியர் துரைராசா*

வாழ்வுண்டு. ஆகவே அவர்கள் தம்மைத் தாமே ஆட்சி செய்யக்கூடிய சுயநிர்ணய உரிமையையும் கொண்டிருக்கின்றனர். அவர்கள் தம்மைத் தாமே ஆட்சி செய்ய விரும்புகின்றார்கள்" என்று பதிலளித்தாராம்.

இந்த விடயங்களை ஒரு கூட்டத்தில் வைத்து பேராசிரியர் அவர்களே தெரிவித்தார்.

தமிழீழத் தேசிய உணர்வுடன் பேசியது மட்டும்தானா பேராசிரியர் செய்த பணி? இல்லை. பேசியபடி வாழ்ந்தும் காட்டியதுதான் அந்தப் பேராசானின் பெருமைக்குக் காரணம்!

"சலுகை பெறக்கூடிய உரிமை இருந்தும் ஏன் நீங்கள் கப்பற் பயணத்தைத் தவிர்த்து, கொலைக் கடலான கிளாலியூடாக கொழும்புக்குப் பயணம் செய்கின்றீர்கள்?" என்று அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கேட்டபோது, அந்தப் பெருமகன் பெருமைபொங்கக் கூறிய பதில், தமிழ்ப் போராட்ட வரலாற்றில் பொறிக்கப்பட்டு விட்டது.

"எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் நோக்குடன், கிளாலி ஊடாகப் பயணம் செய்யக்கூடாது என அரசு சட்டம் போட்டது; ஆனால் மக்கள் அதை மீறிப் பயணம்போய் அரசின் சட்டத்தை உடைத்தனர். இதுவும் அரசுக்கு

> "தமிழர் ஒரு தேசிய இனம் (Nation); அவர்களுக்கு என்றொரு தனித்துவமான நிலமுண்டு – அதேபோல மொழி உண்டு – பண்பாடுண்டு – பொருண்மிய வாழ்வுண்டு. ஆகவே அவர்கள் தம்மைத் தாமே ஆட்சி செய்யக்கூடிய சுயநிர்ணய உரிமையையும் கொண்டிருக்கின்றனர். அவர்கள் தம்மைத் தாமே ஆட்சி செய்ய விரும்புகின்றார்கள்"
>
> – பேராசிரியர் துரைராசா

எதிரான ஒரு போராட்ட வடிவம் ஆகும். நானும் மக்களுடன் சேர்ந்து எனது பங்களிப்பையும் செய்கின்றேன். இதன்மூலம் மக்கள் படும் வேதனையில் நானும் பங்கு கொண்டு மனநிறைவடைகின்றேன்" என்று மனமகிழ்ச்சியுடன் பேராசிரியர் கூறியிருந்தார்.

இன்னுமொரு தடவை, கொழும்பிலிருந்து கப்பல்மூலம் தீவகத்தை அடைந்த பேராசிரியர், ஒருநாள் இரவை



அகதிமுகாமில் எமது மக்களுடன் கழித்தார். அவருக்குத் தனி வசதி செய்துகொடுக்க அங்கிருந்த சிலர் முயன்றபோதும் மறுத்துவிட்டார்.

துன்பப்பட்ட தனது தேசத்தின் குடிமக்களுடன் சேர்ந்து வாழ்வைப் பகிர்ந்து கொள்வதில் அவர் இன்பமடைந்திருந்தார்.

பல்கலைக்கழகத்திலிருந்து தனது கிராமமான வதிரிக்குச் செல்லும் வேளையில், வல்லை வெளியில் – இரத்தப் புற்றுநோய் தாக்கிய அந்த உடம்பை வைத்து அந்தப் பேராசான் மிதிவண்டியுடன் போராடும்போது – வாகனத்தில் அவரை முந்திச் செல்ல முனையும் போராளிகள், கண்ணிவெடி வயலைக் கடப்பதுபோல நெளிந்து – மனங்குமைந்தபடி கடப்பர். மனம்வராது கீழிறங்குபவர்களைப் பார்த்து வெள்ளை மனதுடன் விடைகொடுக்கும் அந்தப் பண்பு, கோடியில் ஒருவருக்குத்தான் இருக்கும்.

யாழ். பல்கலைக் கழக கட்டிடமொன்றில், 'துணைவேந்தர்' என்ற பெயர்ப் பலகையுடன் அதிஉயர் அதிகாரத்தையும் கொண்ட அந்த அறையினுள் பேராசிரியர் இருக்கும்போது, பாலர் வகுப்பறை போன்றே அது தென்படும். பல்கலைக் கழக மாணவர்கள், சிற்றூழியர்கள் சகயமாக உள்ளே போவதும் – சந்தோசமாக உரையாடுவதும் – சிரித்த முகத்துடன் வெளியே வருவதும் வழமையான காட்சிகள்.

சாதாரணமாக இத்தகைய உயர் பதவியில் இருக்கும் ஒரு நபரைப் பார்க்கவே சிரமப்படும் நிலையில், அன்றாடம் இவரை எல்லோரும் சிரமமின்றிப் பார்த்தனர். அவருடன் பேசினர்.

அவரது சொந்தக் கிராமத்திலும் உயர எழுப்பிய மதிற்சுவருக்குள் சிறையிருந்து – மக்களிடமிருந்து அந்நியப்பட்டு – அவர் வாழவில்லை.

சனசமூக நிலையம் சென்று பத்திரிகை வாசித்தார். குடும்பத்தாருடன் சேர்ந்து தோட்டம் செய்தார். கிராமத்து வீதிகளில் நின்றபடி மக்களுடன் அன்றைய புதினங்களைப் பற்றிக் கதைத்தார். மக்களுடன் மக்களாகவே வாழ்ந்தார்.

யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து பிரியாவிடை பெற்றுக்கொண்டு கொழும்பு திரும்ப ஒருசில நாட்கள் முன்னர் பேராசிரியரை அழைத்த விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர், அவரது சேவையைப் பாராட்டும் முகமாக ஒரு விருந்துபசாரம் நடாத்தி அவரைக் கௌரவித்தனர். தளபதிகள் மற்றும் பொறுப்பாளர்கள் பங்குகொண்ட அந்த நிகழ்வில் பேராசிரியர் துரைராசாவும் உரையாற்றினார்.

வழமைபோலவே போராட்டத்தின் தேவை பற்றியும் – சிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறை பற்றியும் – தன்னிறைவான பொருண்மியத்தின் அவசியம் பற்றியும் பேசினார். அப்பேச்சின் ஒரு கட்டத்தில் –

"......எமது இனத்தின் விடுதலைக்காகத் தங்களது உயிரைத் தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்கும் புலிகளுக்கு, நான் தலைசாய்த்து வணக்கம் செலுத்த விரும்புகின்றேன்" என்று, தனது தூய நாவால் போராளிகளை மதித்து உரையாற்றிய அந்தப் பெருந்தகை, எம்மைவிட்டு நிரந்தரமாகவே பிரிந்து விட்டார்.

பேராசிரியர் துரைராசா அவர்கள், புலமையும் பரந்த பார்வையும் கொண்ட பேராசான் மட்டுமல்ல –

தமிழ் மக்களின் இதயங்களைக் கவர்ந்தெடுத்த ஒரு மக்கள் சேவகன் மட்டுமல்ல –

தமிழீழ அன்னைக்குத் தொண்டு செய்த அதன் தவப்புதல்வன்.

தமிழீழ அன்னைக்கு வலுசேர்க்கப்

> "துன்பங்கள் மத்தியிலும் துணிவுடன் செயலாற்றிய கடமை வீரர்"
>
> *-தமிழீழத் தேசியத்தலைவர்*

பாடுபட்ட ஒரு தேசப்பற்றாளன்.

ஒரு உண்மை மனிதன்.

தமிழினத்தின் கல்வியில் அவரது சேவை ஒரு கலங்கரை விளக்கு.

உலகக் கல்விமான்கள் மத்தியில் அவர் ஒரு அறிவுப் பழம்.

எமது மக்களின் உரிமைகள் பற்றிப் பேசும்போது அவர் ஒரு போராளி.

அவரது கிராமத்திலோ வேட்டி கட்டிய விவசாயி.

இவ்விதம் மக்களின் அனைத்து மட்டங்களிலும் தனது பண்பான – நேர்மையான – பணிவான – சேவையால் மக்களின் மனதில் இடம்பிடித்துவிட்ட பேராசிரியரின் திடீர் மறைவு, தமது குடும்ப உறுப்பினர் ஒருவரை இழந்துவிட்ட தவிப்பைத்தான் மக்கள் ஒவ்வொருவரிலும் ஏற்படுத்தியுள்ளது.

தனது உணர்வை வெளிப்படுத்த வதிரிக் கிராமத்தின் அந்த முதியவர் பயன்படுத்திய வார்த்தைகளில் தான் எவ்வளவு அர்த்தம் பொதிந்துள்ளது!

"பேராசிரியர் துரைராசா எமது மண்ணுக்கே திரும்ப வரவேண்டும்!"

## தாயக மீட்புப்போருக்கு காலம் உணர்ந்து அவசரமாக உதவுக!

தமிழீழ விடுதலைப் போராட்டம், சூழ்நிலைகளுக்கேற்ப தேசியத் தலைவரால் மிக நுட்பமாக நெறிப்படுத்தப்பட்டுச் செல்கின்றது என்பதற்கு முல்லைத்தீவு படைமுகாம், தாண்டிக்குளம் படைமுகாம் தாக்கியழிப்புக்களே போதுமான சான்றுகளாகும். இம் முக்கியமான காலகட்டத்தில் தாயக மீட்புக்கான புனிதப் போரில் ஈடுபட்டுள்ள எமது தேசியப் படைக்குத் தேவையான உதவிகளை வழங்குவதில் புலம்பெயர் தமிழர்கள் அனைவரும் காலத்தை விரயமாக்காமல் தாங்களாகவே முன்வந்து உதவ வேண்டும். காலம் உணர்ந்து செய்யும் உதவிகளே பயனுடைய பேருதவியாக அமையும். அவைகளாலேயே பல சாதனைகளை ஈட்டலாம். எம் இனமும் விடுதலையடைய முடியும். விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் பெரும் இழப்பைச் சந்திக்கும் சிங்களப் படை, அதனை எதிர்கொள்ள முடியாமல் அப்பாவிப் பொதுமக்கள் மீது தனது இனவாதப் போரை நடாத்துகிறது. இவ் அவலத்தில் இருந்து தாயக மக்களை காக்க வேண்டுமானால், ஆக்கிரமிக்கப்பட்ட எமது மண்ணை எதிரிப் படையிடம் இருந்து விரைவில் மீட்க வேண்டும். அதற்கு உதவ வேண்டியது எம் எல்லோரினதும் கடமையே. ✷

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்



## முதலாம் பாகம்

### அத்தியாயம் பதினான்கு

(தொடர்ச்சி)

அவளுக்கருகாமையில் அவர்கள் படையெடுத்தனர். அவளுக்கு ஒரு ஒழுகும் மூக்கைத்துடைக்கவும், காயப் பட்ட விரலொன்றை அன்போடு கொஞ்சித் தேற்றவும், ஒரு கண்ணீரை ஆத்மார்த் தமாக தெரிந்திருந்ததோடு, அவளால் கதைகள் சொல்லவும், பியானோ இசைத்தபடி பல மொழிகளில் பாடவும் முடிந்தது.

அவள் சிறு பிள்ளைகளுடனான தனது வேலையுள் முழுமூச்சாக மூழ்கிப்போன தால் அவளுள் இருந்த வேதனையைச் சிறிது மறக்கக்கூடியதாயிருந்தது. அவளிடம் மற்றவர்களுக்காகப் பொறு மையும் நேரமும் இல்லாமல் போனதேயில்லை.

அவளது 15ஆவது பிறந்தநாள் லாசியோடாட்டிலேயே கழிந்தது. அவள் மிகவும் பிடிவாதக்காரியாக இருந்ததைத் தவிர இரு பெரிய நம்பிக்கைகளில் அவள் தங்கியிருந்தாள். அவளுடைய தகப்பனார் மிகவும் புகழ் பெற்ற ஒரு மனிதர். ஜேர்மனியர் ஒரு கௌரவ முகாம் ஒன்றை வைத்திருந்தனர். இங்கு தடுத்து வைக்கப்படுபவர்கள் சித்திரவதை செய்யப் படுவதுமில்லை, கொலை செய்யப் படுவதுமில்லை. அந்த முகாம் செக்கோஸ்லாவாக்கியாவில் தெரசியஸ்டட்டில் (Theresienstadt) இருந்தது. அவரை அங்கு அனுப்பியிருக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருந்ததனால் அவர் உயிரோடு இருக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தன. இரண்டாவது ஒரு நலிவான எதிர்பார்ப்பு என்னவெனில், தடை முகாம்களுக்கு அனுப்பப்பட்ட பின்னும் எத்தனையோ ஜேர்மன் விஞ்ஞானிகள் நாட்டைவிட்டு வெளியே கடத்திச் செல்லப்பட்டிருந்தனர். அந்த எதிர் பார்ப்புக்களை நலிவடையச் செய்யும் விதத்தில் அவளுடைய உறவினர்களில் பாதிப்பேரின் மரணங்கள் உறுதிப் படுத்தப்பட்டிருந்தன. ஒருநாள் பலட்சின் புதிய ஆட்கள் வந்திறங்கியதும், முகாமின் தோற்றம் இரவோடிரவாக மாறிப்போயிற்று. வந்த புதியவர்கள் முகாமின் உள்ளே அமைப்பு முறைகளைச் சீர்படுத்த வந்திருந்த மொசாட் அலியாபெற், பால்மாக் அமைப்புக்களைச் சேர்ந்த பலஸ்தீனியர்களாவர்.

அவர்கள் வந்து சில நாட்களின் பின், முதுவேனிற் காலத்திற்குப் பிறகு முதல் தடவையாக தனது இளையவர்களுக்காக கரேன் நடனமாடினாள். அதிலிருந்து அவள் கிராக்கி அதிகரித்ததோடு, லாசியோடட்டில் அதிகமாக விரும்பப் பெற்றவளாகவும் விளங்கினாள். அவளது புகழ் மார்செயில்ஸ் வரை பரவியதோடு, வருடாந்த கிறிஸ்மஸ் நிகழ்வான "நட் கிராக்கர் சூட்" (Nut Cracker Suite) என்னும் நடன நிகழ்வில் பங்கேற்க அழைக் கப்பட்டாள்.

கிறிஸ்மஸ் 1945

ஹான்சன் தம்பதியினரிடமிருந்து பிரிந்து இருக்கும் முதலாவது கிறிஸ்மஸ் விழாவின்போது தனிமை மிகக் கொடூர மாயிருந்தது. லாசியோடாட்டிலிருந்து அரைவாசிப் பிள்ளைகள், விசேட நிகழ்ச்சியில் நடனமாடுவதைக்காண மார்செயில்ஸ் வந்திருந்தார்கள். அன்று கரேன் முன்னெப்போதும் இல்லாத வகையில் நடனமாடினாள்.

நடன நிகழ்ச்சி முடிந்ததும், பலஸ்தீனிய பால்மாக் லாசியோடாப் பகுதித் தலைவியான கலில் என்னும் பெண், அவளை எல்லோரும் போகும் வரை காத்திருக்கச் சொன்னாள். கலிலியின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது. ....."கரேன் இப்போதுதான் உனது தாயாரும் இரு சகோதரர்களும் டட்சவ் முகாமில் கொல்லப்பட்டதாக உறுதிப் படுத்தப்பட்ட செய்தி கிடைத்தது" என்றாள்.

முன்பிருந்ததைவிட ஆழமான துக்க த்துள் கரேன் அமிழ்ந்திப்போனாள். அவளை இவ்வளவு நாளும் செயல் படவைத்துக்கொண்டிருந்த தளர்ச்சி மில்லாத மனஉறுதி எங்கே மறைந்தது. யூதப்பெண்ணாகப் பிறந்த சாபம்தான் தன்னை டென்மார்க்கில் இருந்து வெளியேறும் பைத்தியக்காரத்தனமான வேலைக்குள் இட்டுச்சென்றதாக அவள் நினைத்தாள். லாசியோடட்டில் பிள்ளை களிடையே ஒரு பொதுவான அச்சம் இருந்தது. எல்லாப் பிள்ளைகளுமே தங்கள் பெற்றோர்கள் உயிரோடிருப்பதாக நம்பினார்கள். எல்லோரும் வரும் என எதிர்பார்த்துக் காத்திருந்த அதிசய நிகழ்வு வரவேயில்லை. அப்படி நம்பியது எவ்வளவு முட்டாள்தனம்.

பல நாட்களுக்குப் பின் அவள் தன் சுய நிலைக்கு வந்தபோது, கலிலியுடன் எல்லா விடயங்களையும் கதைத்துத் தீர்த்தாள்.

> ஜெருசலேம் தேவாலயம் சிதைக்கப்பட்டு, உலகின் நான்கு மூலைகட்கும் யூதர்கள் சிதறடிக்கப்பட்டு, நிலையான நித்திய அலைச்சல்காரராய் 2000ம் வருடங்களாகத் திரியும் ஒவ்வொரு யூதனும் தனக்குள் கேட்க்கும் கேள்வியை இரவின் தனிமையில் கேட்டுக்கொண்டாள் கரேன். தன்னைத் தானே "எனக்கு ஏன் இந்தக் கதி?" எனக் கேட்டுக் கொண்டாள்.

**லியோன் யூறிஸ்**

அவள் தன் தந்தையருடைய மரணச் செய்தியையும், எதிர்பார்த்து வீணே காத்திருக்கும் சக்தி தனக்கிருப்பதாக அவள் நினைக்கவில்லை.

அவளுடைய நம்பிக்கைக்குரிய ஒரே ஆளாக விளங்கிய அந்தப் பலஸ்தீனியப் பெண்ணும், கரேனும் மற்ற யூதர்க ளைப்போலவே பலஸ்தீனம் போவது நல்லதென்று அபிப்பிராயப் பட்டார்கள்.

அந்த ஒரிடம் தான் யூதன் என்று சுயமரியாதையுடன் வாழக்கூடிய இடம் என்று அடித்துச் சொன்னான் கலிலி. ஆனால் தன் நம்பிக்கைகள் சிதறடிக்கப்பட்டதன் விளைவாகவும், இதுவரை யூதததத்துவங்கள் (Judaism) தனக்கு துக்கத்தைக் கொண்டு வந்திருந்ததால் அவற் றைக் கைவிட்டு, ஒரு டென்மார்க் பிரஜையாக, கரேன் ஹான்சனாகவே இந்துவிடவே அவள் விரும்பும் நிலைக்கு ஏறக்குறைய வந்து கொண்டிருந்தாள்.

ஜெருசலேம் தேவாலயம் சிதைக் கப்பட்டு, உலகின் நான்கு மூலைகட்கும் யூதர்கள் சிதறடிக்கப்பட்டு, நிலையான நித்திய அலைச்சல்காரராய் 2000ம் வருடங்களாகத்திரியும் ஒவ்வொரு யூதனும் தனக்குள் கேட்க்கும் கேள்வியை இரவின் தனிமையில் கேட்டுக்கொண்டாள் கரேன். தன்னைத் தானே "எனக்கு ஏன் இந்தக் கதி?" எனக் கேட்டுக் கொண்டாள்.

கழியும் ஒவ்வொரு நாளும் அவளை ஹான்சன் தம்பதியினரிடமே நிரந்தரமாகத் திரும்பிப்போக அனுமதி கோரி கடிதம் எழுதும் நிலைக்கு அவளைத் தள்ளிக் கொண்டு சென்றன. ஒருநாள் காலையில் கலிலி அவளது அறைக்குள் அவசரமாக புகுந்து, கரேனை தரதரவெனக் காரியாலக் கட்டிடத்துக்கு இழுத்துச் சென்றாள். அங்கே லாசியோடாட்டுக்கு புதிதாக வந்திருந்த அகதியொருவரான டாக்டர் பிரென்னர் (Dr.Prerner).

"என்னுடைய கடவுளே"! கரேன் உரக்கவே கூவினாள் நீங்கள் நிச்சயமாகச் சொல்கிறீர்களா?

"ஆம் பிரென்னர் பதிலிறுத்தார் . தொடர்ந்து, "எனக்கு நிச்சயமாகத்தெரியும் , உனக்குத் தெரியாது. நான் உன் தந்தையை முன்பிருந்தே அறிவேன். நான் பேர்லினில் ஒரு ஆசிரியராய் இருந்தவன். நாங்கள் கடிதத் தொடர்புகள் வைத்திருந்தோம் . அத்தோடு மாநாடுக ளிலும் சந்தித்திருக்கிறோம் . ஆம் என் அன்புக்குரியவளே, நாங்கள் இருவரும் தெரசியன்டாட் முகாமில் ஒன்றாக இருந்தோம் . போர் முடிவதற்கு சில வாரங்களுக்கு முன் தான் கடைசியாகச் சந்தித்தேன்" என்றார்.

### அத்தியாயம் பதினைந்து

ஒரு கிழமைக்குப் பின், ஹான்சன் தம்பதியினரிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது, அதில் அகதிகள் அமைப்பிலிருந்து அவள் எங்கிருக் கின்றாள் என்று கேட்டும், அவளுடைய தாய் தந்தையரைப் பற்றி ஏதாவது தெரியுமா என்று கேட்டும் கடிதம் வந்திருப்பதாக அறிவித்திருந்தனர்.

இந்த விசாரணைகள் ஜோஹான் கிளமென்ரிடமிருந்து அல்லது அவர் சார்பில் யாரிடமிருந்தோ வந்திருக்க வேண்டும் என்றும் அனுமானிக் கப்பட்டது. இதிலிருந்து, தந்தையும் தாயாரும் பிரிந்து விட்டார்கள் என்றும், அவளதும் சகோதரர்களதும் சாவைப்பற்றி அவருக்கு எதுவும் தெரியாதென்றும் ஊகித்துக்கொண்டாள். ஹான்சன் தம்பதியினரின் அடுத்த கடிதத்தில் அகதிகள் அமைப்பின் விசாரணைக்குத் தாங்கள் பதில் அனுப்பியதாகவும், ஆனால் அமைப்பு கிளமென்றின் தொடர்பு தங்களுக்கு இல்லாமல் போய்விட்டதாக அறிவித்து இருந்ததாகவும் தெரிவித்திரு ந்தார்கள்.

எப்படியோ அவர் உயிரோடிருக்கின்றார். சுவிடன், பெல்ஜியம், லாசியோபாட் முகாம்களில் செலவழிக்கப்பட்ட மாதங் களின் ஒவ்வொரு பயங்கர நேரமும் வீணாகக்கழியவில்லை. இன்னொரு முறை தனது கடந்த காலத்தைத் தேடிச் செல்லவேண்டிய துணிவு அவளுக்கு உண்டாயிற்று.

லாசியோடாட்டின் முகாம் அமெரிக்க யூதர்களின் பணத்தில் ஏன் பராமரிக்கப்படுகின்றது என்று சில வேளைகளில் யோசிப்பதுண்டு. அம் முகாமில் எல்லாம் உண்டு, அமெரிக்கர்களைத் தவிர. அவள் கலிலியைக் கேட்டாள், அவளோ தோளைக் குலுக்கிக் கொண்டாள். சியோனிசம் என்பது, முதல் ஆளாக இருந்து இரண்டாம் ஆளிடம் பணம் பெற்று, மூன்றாவது ஆளிடம் கொடுத்து, நாலாவது ஆளை அதன் மூலம் பலஸ்தீனம் அனுப்புகிறது. ஒற்றுமையாக இருக்கும் நண்பர்கள் எமக்கிருப்பது எவ்வளவு நல்லது என்றாள் கரேன்.

"ஒற்றுமையாக இருக்கும் எதிரிகளும் எமக்குண்டு" என்று பதிலளித்தாள் கலில். லாசியோடாட்டில் இருந்த மனிதர்கள் யாவரும் வேறெந்த மனிதர்களைப் போலவே நடந்து கொள்வதாக கரேன் நினைத்தாள். அதிகமானவர்கள் அவளைப் போலவே யூதராய் இருப்பது பற்றி குழப்பமடைந்திருந்தனர். அவள் போதுமானளவு எபிரேய மொழியைக் கற்றுக் கொண்டதும், சமய சார்புள்ளவர்களின் பகுதிகளுள் போய், உண்மையாகவே வித்தியாசமானவர்களாய் இருந்த அவர்களது அமானுஷ்ய சமய அனுட்டானங்களிலும், உடுப்புகளை அணிவதிலும் கலந்து கொண்டாள். யூதமதத் தத்துவங்கள் (Judaism) என்ற பரந்த கடல், பதினைந்து வயதான பெண்ணை மூழ்கடித்து விடக்கூடியது. யூதமதம் சிக்கலான சட்டங்களின் தொகுப்பின் அடித்தளத்தைக் கொண்டது. சில எழுத்து மூலமானவை. சில வாய் மூலமானவை. அவை, ஒரு ஒட்டகத்தின் மேலிருந்து எப்படிப் பிரார்த்தனை செய்வது போன்ற மிக நுண்ணிய விஷயங்களைப் பற்றியும் விளக்க மளிக்கும். இவற்றுள், பரிசுத்தமானதாக மோசேசின் ஐந்து புத்தகங்களை உள்ளடக்கிய ரோறா (Torah) கருதப்படுகிறது.

மீளவும் கரேன் தன் வேதகாமப் புத்தகத்துக்கு திரும்பினாள். இப்போது

தொடரும்...

www.tamilarangam.net



## சிறுகதை

# வேரும் விளைநிலமும்

- சாம்பவி - (தமிழீழம்) -

எலும்பெல்லாம் விறைச்சுப் போறளவு பனி. வேட்டியெல்லாம் ஈரமாப் போனாப் போல கிடந்தது. என்னதான் இழுத்துப் போர்த்தினாலும் மூக்கு நுனியில இருந்து கை காலெல்லாம் சிலு சிலுவெண்டு குளிர்ந்தபடிதான். எப்பவோ மேய்ந்த கூரையில ஈர்க்குகள் மட்டுந்தான் மிஞ்சியிருக்குது. இதுக்குள்ளாலதான் பஞ்சுப் பொதி மாதிரி பனி சிந்துது.

"என்ரை நாகதம்பிரானே, என்ன குளிரப்பா"

அரைச்சாமம் தாண்டியிருக்க வேணும். தேய்பிறை நிலவு இப்பதான் முளைக்குது. "சாய்........ நித்திரையும் வருகுதில்லை. ஒரு சுருட்டடிச்சாலாவது எப்பன் குளிர் குறையும்." தாவாரத்துத் திண்ணையிலிருந்த கரிப்பிடிச்ச சிமினிக்குள்ள நூர்ந்து போமாப்போல படபடத்த வெளிச்சத்தைத் தூண்டிவிட்டபடி எழும்பிக் குந்தினன். எனக்குப் பக்கத்தில படுத்திருந்த சின்னவன் ராசன் நித்திரை வெறியில போர்வையைக் காலுக்குக் கீழே சுருட்டித் தள்ளிப்போட்டு குளிரில குறண்டிக்கொண்டு கிடந்தான். போர்வையை வடிவா போர்த்தி விட்டன். தலைமாட்டுக்குக் கீழே கையை விட்டு நெருப்பெட்டியையும், நேற்றுப் பத்திப் போட்டு வச்ச குறைச் சுருட்டையும் எடுத்து, சுருட்டை வாயில வைச்சுக்கொண்டு நெருப்புக் குச்சைத் தட்டினன். அதுவும் பத்தேல்ல. சாய் நெருப் பெட்டியும் குளிர்ந்துபோய்க் கிடக்கு.

ஏழெட்டு குச்சைச் செலவழிச்சு ஒரு மாதிரி சுருட்டைப் பத்திப்போட்டன். நாலைஞ்சு தரம் புகையை இழுத்து விட்டாப் பிறகுதான் குளிர் எப்பன் தணிஞ்சமாதிரிக் கிடக்கு. நேரம் என்னவாயிருக்கும் எண்டு யோசிச்ச நிமிசத்தில,

"டும்......... டும்......... டும்........"

அடுத்தடுத்து ஆட்லறி ஷெல் விழுந்து அதிர்ந்த சத்தம். நான் திடுக்கிட்டுப் போனன். நெஞ்சுக்குள்ள ஏதோ அடைச்ச மாதிரிக் கிடந்தது.

"இதென்ன கோதாரி. திரும்பவும் இந்தக் குறுக்கால போவார் வெளிக்கிட்டிட்டாங்களோ"

தட்டுத்தடுமாறி எழும்பி தாவாரத்துத் திண்ணையிலிருந்து இறங்கினன்.

வீட்டுக்குள்ள படுத்திருந்த பவளமும் வாரிச் சுருட்டிக்கொண்டு வெளியால வந்தாள்.

"என்னணை சத்தம் பலமாக் கேக்குது? ஆமிக்காரர் வெளிக்கிடுறாங்களோ?"

பதட்டமாகக் கேட்டவள், சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்தி மொட்டாக்கும் போட்டுக்கொண்டாள். சின்னவன் ராசன் எழும்பி வந்து பவளத்தோடை ஒட்டிக்கொண்டு நிண்டான்.

"ஆச்சி என்னணை சத்தம்? ஆமி வெளிக்கிடுறானோ?"

"தெரியேல்லையடா மோனை. சத்தம் பரந்தன் பக்கந்தான் கேக்குது. என்னப்பா விறைச்சுப்போய் நிக்கிறியள். அயலட்டைச் சனம் வெளிக்கிடுதுகளோ தெரியேல்லை. ஒருக்காப் பக்கத்து வீட்டுக் கந்தப்புவைக் கூப்பிட்டுப் பாருங்கோவன்."

"வெளிக்கிடுறதோ? இனியெங்க வெளிக் கிடுறது? பவளம் நீ விசர்க் கதை பறையாத. சத்தங்களை வடிவாக் கேள். முதல் கேட்ட ஆட்லறிச் சத்தத்தை இப்ப காணேல்ல. துவக்குச் சூட்டுச் சத்தங்கள்தான் இப்ப கேக்குது."

சத்தங்கள் கேட்ட பக்கத்தையே உற்றுப் பார்த்தபடி பக்கத்தில நிண்ட பூவரச மரத்தைப் பிடித்துக் கொண்டு யோசிச்சன். பவளமும் அந்தத் திசையைத்தான் பார்த்துக்கொண்டு நின்றாள். ராசன் பவளத்தின்ர மடியுக்குள்ள ஒட்டிக் கொண்டு முழுசிக்கொண்டு இருந்தான். நான் தூரத்தில கேட்கிற சத்தத்தையும் தெரியிற வெளிச்சங்களையும் பார்த்துக்கொண்டே சொன்னன்,

"சத்தங்களைப் பார்த்தால் எங்கட பக்கத்தில தான் காம்புக்குள்ள பூந்துட்டாங்கள் போலக்கிடக்கு."

"மெய்யாவோ? முல்லைத்தீவுக்குள்ள பூந்த மாதிரியே? ம்........" பெரியதொரு பெருமூச்சை இழுத்துவிட்டபடி தலைக்கு மேலே கையைத் தூக்கிக் கும்பிட்டாள். "புளியம்பொக்கணை நாகதம்பிரானே! என்ர பிள்ளையளைக் காப்பாத்தையா."

"என்னப்பு வலு அமளியாக் கிடக்கு? காம்படிபடுதோ? றோட்டில வாகனங்களும் அறம்புறமா ஓடித்திரியுது."

எண்டபடி பக்கத்து வீட்டுக் கந்தப்பு வந்தான்.

"ஓம் கந்தப்பு. அதுதான் நானும் பாக்கிறன்."

"அப்பு நான் வாறனணை. சத்தத்துக்குப் பிள்ளையள் பயந்து போங்கள்,"

எண்டபடி வந்த பாதையாலேயே திரும்பினான். நானும் வந்து திண்ணையில குந்தி நூந்துபோன சுருட்டைத் திரும்பவும் பத்தினன். பவளம் குசினிக்குள்ள போட்டாள். தேத்தண்ணிக்கு அடுப்பெரிக்கிறாள் போல. உள்ளுக்க பேத்தியும் பேரனும் குசுகுசுத்தது எனக்கும் மெதுவாகக் கேட்டுது.

"அக்காவும் இந்தச் சண்டையில நிப்பாவோ ஆச்சி"

ராசன் பவளத்திடம் கேட்டான். எனக்கு நெஞ்சில ஊசியால குத்தின மாதிரிக் கிடந்தது. போர்வையை எடுத்து தோளைச் சுத்திப் போர்த்திக்கொண்டு, சுருட்டுப் புகையை இழுத்து விட்டுக்கொண்டு அப்படியே இருந்தன். சத்தம் தொடர்ச்சியாகவும் விட்டுவிட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. ராசன் கேட்ட கேள்வி என்னவோ பழைய நினைவுகளை எல்லாம் கிளறி விட்டுட்டுது.

எனக்கு நல்ல ஞாபகம் இருக்கு. பரந்தனில நான் என்ர அப்பு, ஆச்சியோட குடியிருந்த இடம் ஒரே காடு. காடெண்டால் யானைக்காடு. நானும் அப்புவும் நெருப்பெரிச்சு, மணியடிச்சு யானை திரத்தின இரவுகள். என்ர அப்பு நல்ல கெட்டிக்காரர். சும்மா சொல்லக்கூடாது, அந்தக் காலத்தில ஐம்பது ஏக்கருக்கு மேல காடு வெட்டி சேனைப்பயிர் செய்த ஆள். வெள்ளைக்காறன் றோட்டுப் போட்டு முதன் முதலா எங்கட ஊருக்கால கரிக்கோச்சி போகேக்க, நான் சின்ன ஆள். ச்சு...... இதென்னத்துக்கு இப்ப என்ர பழைய கதை. என்ர பவளத்தின்ர தேப்பன் பவளத்தோடை ஒரு பட்டிமாடும் சீதனமாகத் தந்தவர். பரந்தன் பிரதான வீதிக்கரையில பழைய ஓட்டு வீடும், வயல் காணியும் பட்டி மாடுகளுமா என்ன மாதிரி வாழ்ந்தனாங்கள்.......! காலம் செல்லச் செல்ல இடம் நல்ல செந்தழிப்பா மாறிட்டுது. பள்ளிக்கூடமெல்லாம் வந்திட்டுது. கடை கண்ணி எல்லாம் வந்து, சனங்களும் கூடி, கோயில்களும் எண்டு, எப்படியெல்லாமோ வாழ்ந்த இடம். வன்னியெண்டா மலேரியா, வயிற்றோட்டம் அது இதுவெண்டு சொல்லுறவைதான். ஆனால், உதெல்லாம் எங்களுக்குப் பழகீட்டுது. காடு கரம்பையெண்டு பகலிரவா உழைச்ச தேகம் இரும்புமாதிரிக் கிடக்கேக்க என்னெண்டு நுளம்பு குத்தும்? என்ர பவளமும் வலு கெட்டிக்காரி. அவளுக்குத் தெரியாத வேலையில்லை. அவளில்லாட்டா நான் பெரிய கமக்காரனா வந்திருக்க ஏலாது. பெரிய ராணி மாதிரி நிமிர்ந்துதான் நடப்பாள். ஊர்ப் பெம்பிளையள் எல்லாம் இவளிட்டதான் நல்லது, கெட்டதுகளுக்கு வந்து யோசினை கேட்பினம். அவளும் அந்தக் காலத்தில வலு சோக்காத்தான் இருந்தவள். என்ர கஸ்ர காலம். எங்களுக்குப் பிறந்த பிள்ளையள் மூண்டும் பிறந்த வீட்டுக்கையே செத்துப்போச்சுதுகள். நாலாவதா ஒரு பெட்டைதான் மிஞ்சினாள்.

அவளை நல்லா வளத்தம். படிப்பிக்க ஆசைதான். ஆனால், பள்ளியொண்டும் கிட்டவாயில்லை. ஆறேழு மைல் கடந்து போனாத்தான் ஒரு சின்னப் பள்ளிக்கூடம். இடையில பெரிய காடு. பொம்பிளைப் பிள்ளையைத் தனியா விடப் பயத்தில, அவளைப் படிக்கவே விடேல்ல. வளந்தாப்பிறகு பக்கத்து ஊரில நல்ல பிரயாசையான ஒரு பொடியனுக்குச் செய்து குடுத்தனாங்கள். அவனும் திறமான கமக்காரன். ம்........ ரெண்டும் நல்ல சந்தோசமாகத்தான் இருந்ததுகள். எங்களுக்கும் மூண்டு பேரப்பிள்ளை யாச்சுது. மூத்தவள் ராகினி. அடுத்தவள் ரோகினி. கடைசிப் பெடியன்தான் ராசன். எனக்கும் பவளத்துக்கும் எங்கட பேரப்பிள்ளையளை நல்லாப் படிப்பிக்க வேணுமெண்டுதான் கொள்ளை ஆசை. இப்ப நல்ல பள்ளிக்கூடங்களெல்லாம் வந்திட்டுது. அதுகளுக்கும் அம்மா, அப்பாவைவிட அப்பு, ஆச்சிமிலைதான் அதிகம் ஒட்டு. உந்தப் பிரச்சனையள் தொடங்கினாப்பிறகு ஊருக்குள்ள சாவுகளே சாதாரணமாகிப்போச்சு. எண்டாலும் இவ்வளவு கெதியா என்ர வீட்டுக்குள்ளேயே வருமெண்டு நினைக்கையில்லைத்தான். எட்டு வருசத்துக்கு முந்தி ஒரு நாள் ஆனையிறவுக் காம்பில இருந்து ஆமிக்காறன் அடிச்ச ஷெல் வீட்டுக்கு மேல விழுந்தது. என்ர மகளும் மருமகனும் நடுவில் பெட்டை ரோகினியும்......... கடவுளே........ இப்ப நினைச்சாலும் தாங்கேலாமத்தான் கிடக்கு. என்ர பேத்தி ராகினி உண்மையில



தொடர்ச்சி 12 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வேரும் விளை....

## (சிறுகதை)

ராசாத்திதான். அவளிருந்தாலே போதும். வீட்டில ஆயிரம் பேர் இருந்தமாதிரி கலகலப்பு. அவள் சாதுவாக நடந்ததை நான் பார்க்கையில்லை. எந்த நேரமும் கன்றுக்குட்டி மாதிரி துள்ளினபடிதான். பள்ளிக்கூடப் பெரிய வாத்தியார் சொல்லுவார், "அப்பு, உன்ரை பேத்திதானணை உந்தப் பள்ளிக் கூடத்திலேயே கெட்டிக்காரி. உவள் கட்டாயம் கம்பசுக்குப் போவாள்."

எனக்கு நெஞ்செல்லாம் நிறைஞ்சு போகும். பெரிய வாத்தியார் சொன்னதை பவளத்திட்டச் சொல்லுவன். அவ ர் தன்ர சுருங்கிப்போன கண் கலங்கச் சிரிப்பாள்.

"பவளம் அது நல்ல பெரிய படிப்புக் கண்டியோ. யாழ்ப்பாணம் போய்த்தான் படிக்கவேண்டி வரும். நாங்கள் காசுகளைக் கவனமாச் செலவழிச் சாத்தானப்பா பிள்ளை எந்தக் குறையுமில்லாம ராசாத்தி மாதிரிப் படிச்சு முன்னேறுவாள்."

"நீ படி மோனை. இந்த மொக்குச் சீவன் பட்ட கஸ்ரங்களை நீ படக்கூடாதணை. பெரிய படிப்புப் படிச்சு டாக்குத்தராக வரவேணும்." ராகினி சிரிப்பாள்.

"சும்மா இரணையாச்சி. ஏன் படிச்சாச் சமைக்கக் கூடாதோ? சாப்பிடத் தெரிஞ்ச ஒவ்வொரு மனிசருக்கும் சமைக்கவும் தெரிய வேணுமெணை."

பவளம் தன்ரை வெத்திலை காவிப் பல்லைக் காட்டிச் சிரிச்சுக்கொண்டே தேத்தண்ணி தருவாள். கண்மட்டும் மின்னிக்கொண்டிருக்கும். அது நிறையக் கனவுகள். ம்...... அவளுக்குத்தான் ராகினியில் எவ்வளவு பாசம். குனிஞ்சு ஒரு வேலை செய்ய விடமாட்டாள்.

"நீ படி மோனை. இந்த மொக்குச் சீவன் பட்ட கஸ்ரங்களை நீ படக்கூடாதணை. பெரிய படிப்புப் படிச்சு டாக்குத்தராக வரவேணும்." ராகினி சிரிப்பாள்.

"சும்மா இரணையாச்சி. ஏன் படிச்சாச் சமைக்கக் கூடாதோ? சாப்பிடத் தெரிஞ்ச ஒவ்வொரு மனிசருக்கும் சமைக்கவும் தெரிய வேணுமெணை."

நான் வெளித் திண்ணையிலை சுருட்டுப் பத்திக்கொண்டே உவையின்ர கதையைக் கேட்டுக்கொண்டிருப்பன். இப்ப தவறாமல் ராகினிக்காக ஒவ்வொரு நாளும் பேப்பர் எடுக்கிறனான். நான் தவறிக்கூட பள்ளிப்பக்கம் ஒதுங்கின ஆளில்லை. பள்ளிவிட்டு வந்து சாப்பிட்டவுடன் ராகினி பேப்பரோட எனக்குப் பக்கத்தில வந்து சத்தமா வசிப்பாள். நான் வலு கவனமாக் கேப்பன். எனக்கு வலு புளுகாக் கிடக்கும். ராகினி எவ்வளவு கருத்தாகக் கதைக்கிறாள். கடவுளே எனக்கும் வரவரக் கண்பார்வையும் மங்கிக்கொண்டு போகுது. உவள படிச்சு பெரியவளா வாறதைப் பார்க்கும் மட்டும் எண்டாலும் கண் பார்வை இருக்கவேணும். முந்தி மாதிரி இப்பெல்லாம் வேலையும் செய்ய முடியிறதில்லை. உடம்பு நல்லாத் தளந்து போச்சுது. மண்வெட்டி பிடிச்சுப் பிடிச்சு என்ர கை மரம் மாதிரித்தான் இருக்கும். பக்கத்திலை வந்து குந்திக்கொண்டு என்ர கையைப் பிடிச்சு ஒவ்வொரு விரலையும் தடவித் தடவிப் பார்ப்பாள். கனநேரம் அப்படியே இருப்பாள்.

"அப்பு நீங்கள் வாழ்க்கையில கஸ்ரத்தைத் தவிர வேறென்னத்தைக் கண்டனியள்" எண்டபடி என்ரை முகத்தைப் பார்ப்பாள். கூண் கலங்கின மாதிரிக் கிடக்கும்.

"அதுக்கென்ன செய்யிறது? எங்கட பலன் அப்படி. எனக்கும் ஆச்சிக்கும் செத்தாப்பிறகு கொள்ளி போடப் பிள்ளையள் இருக்கிறதே. அதே காணும். வாறனாத்தை, வயலுக்குத் தண்ணி பாச்சவேணும்."

மண்வெட்டியைத் தோளில் வைச்சுக் கொண்டு நான் மறையுமட்டும் கடப்படியில நிண்டு பார்த்துக்கொண்டே நிற்பாள்.

தொண்ணூற்றி ஒண்டாக்கும். ஆடிமாசமா இருக்க வேணும். ஆனையிறவுப் பக்கமா பெரிய சண்டை தொடங்கிட்டுது. ஒரு மாசமளவும் நடந்தது. நிறையப் பிள்ளையள் உயிரைக் குடுத்த சண்டை. அப்பெல்லாம் காணிக்குள்ள நிண்ட தென்னையில இளநீர்க் குலையெல்லாம் வெட்டி பிள்ளையளுக்குக் குடுத்துப் போட்டன். பிள்ளை ராகினியும் காயப்பட்ட பிள்ளையளைப் பார்க்கப் போயிட்டாள். அந்தக் காலத்தில எங்கட பிள்ளையள் உந்த உப்பு வெளிக்குள்ள நிண்டு பட்ட கஸ்ரங்களை எந்தக் காலத்திலையும் மறக்கேலாது. ஒரு மாதிரி எல்லாம் ஓஞ்சு போச்சுது. பள்ளிக்கூடங்கள் கூடத் தொடங்கிட்டுது.

ஆனால், ராகினிதான் முந்திமாதிரி ஆர்வமா பள்ளிக்குப் போறதைக் காணேல்ல. அவள் வரவர சரியா மாறித்தான் போனாள். இப்படித்தான் அண்டைக்குப் பின்னேரமும் ரியூசன் எண்டு வெளிக்கிட்டவள், முத்தத்து மாவடியிலை குந்தியிருந்த என்ர கையையும் பவளத்தின்ர கையையும் எடுத்து தன்ர மடியில வைச்சு தடவிக்கொண்டே இருந்தாள்.

"என்ன நாச்சியார் வகுப்புக்கு நேரம் போகுதெல்லே"

பவளந்தான் சொன்னாள்.

"ஓமணையாச்சி நான் அப்ப போட்டு வாறன்"

எண்டு எழும்பினவள், அதில நிண்ட ராசனை இழுத்து தன்ர இடத்தில இருத்திப்போட்டு சைக்கிளை உருட்டிக்கொண்டு நடந்தாள். கேற்றடியில நிண்டு ஒருக்காத் திரும்பிப் பார்த்துவிட்டுப் பெட்டை போட்டாள். நல்லாப் பொழுதுபட்டாப் பிறகும் ஆளைக் காணேல்ல. நாங்கள் துடிச்சுப் போனம். ராகினியின்ர கூட்டாளிப் பிள்ளையொண்டுதான் வந்து சொல் லிச்சுது, "அப்பு ராகினி இயக்கத்துக்குப் போட்டாள்" என்று.

பவளம் பெரிசாக் கத்தத் தொடங்கீட்டாள். நானும் ஆத்துப் பறந்து பொம்பிளைப் பிள்ளையளின்ரை காம்புக்குப் போனன். அங்க அவளைக் காணேல்ல. அதுல நிண்ட பிள்ளையள் சொல்லிச்சினம்,

"அப்பு அவ றெயினிங்குக்குப் போயிற்றா, உந்தக் கடிதத்தைத் தந்தவா. நீங்கள் கவலைப்படாமல் வீட்டுக்குப் போங்கோ."

"நான் என்னெண்டு மோனை கவலைப்படாமல் இருக்கிறது." சொல்லிக்கொண்டே அவயளைப் பார்த்தன். அதுகளும் சின்னப் பிள்ளையள் தான். என்ன செய்யிறதெண்டே தெரியாமல் அவடத்திலேயே நிண்டன். எனக்கு ஒண்டு மட்டும் வடிவா விளங்கிச்சுது. என்ர பிள்ளை இனி இயக்கத்தை விட்டு வராள். எனக்கு அவளை நல்லாத் தெரியும். பேசாமல் திரும்பி நடந்தன். நடக்கேலாமல் தள்ளாடிச்சுது. மூச்சு விடவும் கஸ்ரமாக் கிடந்திச்சுது. கடவுளே இண்டைக்குத்தான் வயசு போனமாதிரிக் கிடக்குது. ஒரு மாதிரிக் கஸ்ரப்பட்டு கண்ணீருக்குள்ளால ராகினியின்ரை கடிதத்தைப் படிச்சுப் போட்டன்.

அப்பு, ஆச்சி!

நீங்கள் மண்ணுக்காக எவ்வளவோ கஸ்ரப்பட்டனீங்கள். எல்லாத்தையும் வீணாக்கக்கூடாதெண்டுதான் நானும் மண்ணுக்காகக் கஸ்ரப்படப் போறன். நான் எப்பவும் உங்கட பிள்ளைதான்.

அன்புடன்,

ராகினி.

பவளம் சாப்பாடு தண்ணியில்லாமல் கிடந்தாள். எனக்கு எல்லாமே இருண்டு போனமாதிரித்தான் கிடந்திச்சு. காலம்தான் எவ்வளவு வேகமாப் போகுது. ஆச்சுது ஐஞ்சு வரியம். ராகினிக்கு இப்ப இயக்கப் பேர் மாதுரியாம். இடைக்கிடை லீவில் வந்து நிற்பாள். எனக்குப் பின்னாலேயே வயலுக்கு வருவாள். வரம்பில் குந்திக்கொண்டு கண்ணுக்கெட்டாத தூரம் மட்டும் விரிஞ்சு கிடக்கிற பச்சை வயலைப் பார்த்துக்கொண்டே இருப்பாள்.

இப்ப இயக்கப் பிள்ளையள் எல்லாமே எங்கட பிள்ளையளாப் போச்சுதுகள். கடவுளே எண்டு சீவனுக்குப் பழுதில்லாமல் இருந்தாலே காணும். நானும் பவளமும் அவள் வந்து போற நாட்களுக்காகக் காத்திருக்கப் பழகிட்டம்.

எட எவ்வளவு நேரமாப் போச்சு! பழைய யோசினையள் வந்தால் நேரம் போறதே தெரியாது. பொழுது நல்லா விடிஞ்சு போச்சுது. கைகால் கழுவிக்கொண்டு பவளம் தந்த தேத்தண்ணியைக் குடிச்சுப்போட்டு வளவுக்கை வைச்ச மரவெள்ளிக்குப் பாத்தி கட்டப் போனன். இன்னும் சத்தம் கேட்டபடிதான் இருக்கு. மேலால வந்தவனும் குண்டுகளைப் போட்டுட்டுப் போயிட்டான்.

"இனியும் வருவான் துலைவான். நாகதம்பிரானே! எல்லாம் வெற்றியாய் முடியவேணும்" மனதுக்குள்ள வேண்டியபடியே, பாத்திகட்டிக்கொண்டு நிண்டன். நேரமும் பத்துக்கு மேலே எண்டு நினைக்கிறன். ராசன் ஓடி வந்தான்.

"அப்பு அப்பு, ஆச்சி......"

"என்னடா என்ன?"

உள்ளுக்க பேத்தியும் பேரனும் குசுகுசுத்தது எனக்கும் மெதுவாகக் கேட்டது.

"அக்காவும் இந்தச் சண்டையில நிப்பாவோ ஆச்சி"

ராசன் பவளத்திடம் கேட்டான். எனக்கு நெஞ்சில ஊசியால குத்தின மாதிரிக் கிடந்தது.

கேட்டபடியே முத்தத்துக்கு வந்தன்.

அவன்ர முகம் இருண்டபடியே கிடந்தது.

"இதென்ன கடவுளே! ஏன்ரா பொடியா ஓடி வாறாய்?"

"அப்பு, அப்பு – அந்தக்கடையிலயெணை ரெண்டு அக்காமார் எங்கட வீட்டை அடையாளம் கேட்டுக்கொண்டு நிக்கினம். நான் ஓடி வந்திட்டன்.

"என்ன?"

என்ர தலையில ஆயிரம் குண்டு சேர்ந்து விழுந்த மாதிரி கிடந்தது. "ஐயோ என்ர நாகதம்பிரானே!"

"பவளம் எப்பன் தண்ணி கொண்டா"

எலும்பும் தோலுமா நிண்ட பவளம் விறைச்சுப் போய் நிண்டாள். ஆவெண்டபடியே அவள் கால் சோர அப்படியே திண்ணையில குந்தினாள். என்னால ஏலாமல் கிடக்கு. குடலெல்லாம் சுருண்டு வந்து தொண்டைக்குள்ள அடைச்சுப் போட்டுதுபோல. அந்தா கேற்றைத் திறந்துகொண்டு அந்தப் பிள்ளையளும் வந்திட்டினம். ஐயோ! ஏன் வருகினம்? ஏனிப்படி இதுகளின்ரை முகம் காஞ்சு வறண்டு, இவயளுக்கும் எங்களமாதிரி தொண்டை இறுகிப் போச்சோ? அப்படித்தான் இருக்க வேணும். ஏன் பேசாமல் வருகினம். இவையும் ராகினியின்ர கூட்டாளிப் பிள்ளையள் போல.

எலும்புக் கூடுகளாகிப் போன இந்தக் கிழடுகள் மங்கிப்போன கண்ணை விரிச்சு அந்தப் பிள்ளையளையே பார்த்துக் கொண்டிருந்தம். அவை எங்களுக்குப் பக்கத்தில வந்திருந்துகொண்டு என்னையும் பவளத்தையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டு நிக்குதுகள். ஒரு பிள்ளை தன்ர பொக்கற்றுக்குள்ளயிருந்து கடிதமொண்டை எடுத்தது. "அப்பு, ராகினி கடிதமொண்டு தந்துவிட்டவா." எனக்கு ஒண்டும் கதைக்க வாய் வரவில்லை. அந்தப் பிள்ளைக்கு என்ர நிலை விளங்கியிருக்க வேணும். தானே கடிதத்தைச் சத்தமா வாசிச்சுக் காட்டிச்சுது. ராகினியின்ர கடிதம்தான்.

அப்பு,

அவசரத்தில் எழுதுகிறேன். உங்களுக்குத் தெரியும் என்னுடன் அடிக்கடி வீட்டுக்கு வரும் என் உயிரான நண்பி, வானதி இந்தச் சண்டையில் வீரச் சாவடைந்துவிட்டாள். அவளது பெற்றோர் யாழ்ப்பாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றனர். இப்போது அவளுக்கு நீங்கள்தான் எல்லாம். எந்தக் குறையும் இல்லாமல் நமது வீட்டில் அவளது இறுதி நிகழ்வுகளைச் செய்யவும். என்னால் இப்போது வரமுடியாது. இக்கடிதத்துடன் வரும் எமது பிள்ளைகளுக்கு முழு உதவியையும் செய்யவும்.

உங்கள் அன்பின்,

ராகினி.

"என்ர தெய்வமே, நாகதம்பிரானே, என்ர ஐயோ!" எப்பன் நேரம் எனக்கொண்டும் தெரியேல்ல. என்ர உயிர் ஒருக்கா நிண்டு துடிக்குதோ எண்டுதான் நினைச்சன். பவளமும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளின்ர கண்ணில கண்ணீர்......... கடிதத்தை வாசிச்ச பிள்ளையளும் எங்கட முகங்களையே மாறிமாறிப் பாக்குதுகள். இந்தப் பிள்ளையளும் அப்பிடியே என்ர ராகினியைப் போல. ஐயோ! அப்படியே நான் கூசிப் போனன். ச்சீ! இதென்னது? என்ர பிள்ளைக்கு ஒண்டுமில்லை எண்டவுடன் நான் ஏன் இப்படி நிம்மதியா மூச்சு விட்டனான். ஐயோ! எல்லாருமே என்ர பிள்ளையள். எல்லாருமே என்ர பிள்ளையள்" என்னால இனியும் ஏலாமப் போட்டுது, வாய்விட்டு முணுமுணுக்கத் தொடங்கினன். தூரத்தில சத்தம் இன்னும் ஓயவேயில்லை. ✷

www.tamilarangam.net



# ஐக்கிய நாடுகள் சபை 15 வருடங்கள் முயற்சித்துப் பார்த்தும் பயங்கரவாதத்தையிட்டு இணக்கம் காண முடியவில்லை

உலகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராக, குடிவரவுச்சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை, கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகியது. பலநாள் விசாரணையின் பின்னர், இவ் வழக்கு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

வழக்கு விசாரணையின்போது, அகில உலக சட்ட நிபுணர்களது சாட்சியங்கள் நீதி மன்றத்தில் சுரேஷ் சார்பாக நெறிப்படுத்தப்பட்டன.

மார்ச் மாதம் 20 ஆம் நாள் மாலை நடந்த நீதிமன்ற விசாரணையின்போது Illinois பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம் அளித்தார்.

அவரது சாட்சியத்தின் முக்கிய பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கீழே தருகிறோம். இது முன்னர் வெளிவந்த சாட்சியத்தின் தொடர்ச்சியாகும்.

## - பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

கேள்வி: அதைக் கேட்க எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

பதில்: அவரது தலைப் பெயர் மொறாக்கே. அது ஒரு பிரன்சுச்சொல். Terror, வரலாற்று ரீதியாக றொபெஸ்பியரே அவர்களால் பிரன்சுப் புரட்சியின் போது அறிமுகப்படுத்தப்பட்ட சொல். பயங்கரவாதம் என்ற சொல் ஆதியில் அரசுகள் தமது மக்களுக்கு எதிராகக் கடைப்பிடிக்கும் கொள்கையைச் சித்தரிக்க உபயோகிக்கப்பட்டதாகும்.

இதுவே, 'பயங்கரவாதம்' என்ற சொல் வரலாற்று ரீதியாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட வரலாறாகும்.

ஆனால், இன்று அந்தச் சொல் அரசசார்பற்ற குழுக்கள், அமைப்புக்கள் என்பவற்றை அழைக்க உபயோகிக் கப்படுகின்றது. ஆதியில் அரசுகளுக்கே பயன்படுத்தப்பட்டது.

கேள்வி: அதை நாங்கள் அகராதியில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். ஆனால், உங்களுடைய வரைவிலக்கணம் என்ன?

பதில்: அதுதான் எனது வரை விலக்கணம்.

நீதியரசர்: அது என்ன?

பதில்: நான் சற்று முன்பு சொன்னது.

கேள்வி: அந்த வார்த்தை எங்கிருந்து வந்தது என்று விளக்கினீர். ஆனால், அந்த வார்த்தைக்கு உம்முடைய வரைவிலக்கணம் என்ன?

பதில்: பயங்கரம்.

நீதியரசர்: பயங்கரம்?

சாட்சி: அங்கிருந்துதான் அது வந்தது. நீங்கள் ஒக்ஸ்போட் அகராதியைப் பார்த்தால்......... நீங்கள் அந்த வார்த்தையின் வேரைப் பார்க்கலாம். பிரன்சுப் புரட்சியின் போதுதான், அந்தச்சொல் முதன்முதல் பாவிக்கப் பட்டது.

திரு. வயலன்கோட்:

கேள்வி: பேரூந்தில் குண்டுவைத்த சம்பவத்திற்குப் போவோம். பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு உம்முடைய வரைவிலக்கணப்படி, பேரூந்தில் குண்டு வைப்பதைப் பயங்கரவாதம் என்று சொல்ல முடியுமா?

பதில்: பயங்கரவாதத்தை நான் வரைவிலக்கணம் செய்தபோது அது அரசுகளால் உபயோகிக்கப்பட்ட கொள்கை என்று சொன்னேன். அது அரசுகள் தமது மக்களுக்கு எதிராகக் கடைப்பிடிக்கும் கொள்கையைச் சித்தரிக்க உபயோகிக்கப்பட்ட சொல் லாகும். அதாவது வரலாற்று ரீதியாகப் பிரன்சுப் புரட்சியின் போது அறிமுகப்படுத்தப்பட்ட சொல்.

நான் இங்கு யுத்தக் கண்ணோட்டத்தில் தனிப்பட்ட மனிதர்களுக்கு எதிராக நடாத்தப்படும் வன்முறைகள் பற்றிப் பேசுகிறோம். இதற்கு, எவ்வாறு உலக நாடுகள் முகம் கொடுத்தன?

அவை பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு வரைவிலக்கணங்கள் காண்பது பற்றிய பிரச்சனைக்குப் போகாமல், காரணம் இங்கு நீங்களும் நானும் வில்லங் கப்படுவது போல, ஐக்கியநாடுகள் சபையும் 15 வருடங்கள் முயற்சித்துப் பார்த்தும் அவர்களால் எதையிட்டும் இணக்கம் காணமுடியவில்லை.

வரைவிலக்கணம் பற்றிய விவாதத்தை ஒருபுறம் வைத்துவிட்டு இராணுவங்கள் போலவே தேசிய விடுதலை இயக்கங்களையும் நடாத்துவோம். என்னைப் பொறுத்தளவில் அந்த நேரத்தில் அது மிகவும் நடைமுறைச் சாத்தியமான தீர்வாகும்.

நாங்கள் ஒரு வரைவிலக்கணத்துக்கு ஒத்துவர நிறைய நேரத்தை எடுத்தோம். அப்பிடியிருந்தும் எங்களால் இணக்கத்துக்கு வரமுடியவில்லை.

கேள்வி: ஆனால், ஒரு சந்தையில் அல்லது பேரூந்தில் குண்டு வைப்பது மக்களிடையே திகிலை ஏற்படுத்தும் என்பதையாவது ஒத்துக்கொள்கிறீர்களா?

பதில்: அது மக்களிடையே நிச்சயமாகத் திகிலை ஏற்படுத்தும்.

கேள்வி: அது மக்களைப் பயம் கொள்ளச் செய்யும்?

பதில்: நிச்சயமாக.

கேள்வி: உங்களது கட்டுரையின் அதிகாரம் 3இல், நீங்கள் தேசிய விடுதலை இயக்கங்கள் பற்றிக் குறிப்பிடுகிறீர்கள். உங்களது அபிப் பிராயத்தில் தேசிய விடுதலை இயக்கங்கள் எவை என்பதற்கு உதாரணங்களும் தந்திருக்கிறீர்கள். நான்கு, ஐந்து இடங்களில் நான் நினைக்கிறேன், ஒரே குழுவைக் குறிப்பிடுகிறீர்கள் என்று. இது எங்கு குறிப்பிட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறேன்........ பக்கம் 88இல் தேசிய விடுதலை இயக்கங்கள் என்று சொல்லப்படுகின்ற PLO, IRA, ANC, SWAPO, FALN என்பனவாகும். ஐயா, எனது கேள்வி என்னவென்றால்: ஐ. ஆர். ஏ ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்று சொல்கிறீரா?

பதில்: ஆம்! ஒப்பந்தம் 1இன் வரைவிலக்கணப் பிரகாரம்.

கேள்வி: அதை ஏற்றுக்கொள்கிறேன், சமீபத்திய சம்பவங்கள் இலண்டன் Canary Wharf மீது நடாத்தப்பட்ட குண்டுத்தாக்குதல்.......... ஐ. ஆர். ஏ ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்ற அடிப்படையில் ஒப்பந்தம் 1 ஐ. ஆர். ஏ க்குப் பாதுகாப்புக் கொடுக்கிறதா?

பதில்: நான் சொன்னேன்........

திரு. வயலன்கோட்:

கேள்வி: ஆகவே ஜெனிவா மரபு ஒப்பந்தம் 1, மற்றும் போர்ச் சட்டத்தின்கீழ் ஐ. ஆர். ஏ உறுப்பினர்கள் போராளிகளாகக் கணிக்கப்படுவர்? அது பற்றி உங்களுக்கு ஏதாவது பிரச்சனை இருக்கிறதா........

பதில்: அவர்கள் நேரடியாகப் பொதுமக்களைத் தாக்கினால், போர்க் குற்றங்களுக்கு அவர்கள் மீது வழக்குத் தொடரவேண்டும். ஆம்.

கேள்வி: மிக அண்மைக்கால உதாரணம் Canary Wharf கட்டிடத்துக்குக் குண்டு வைத்தது. அந்தக் கட்டிடத்தில் இருந்த பொதுமக்களை இலக்கு வைத்தார்கள் என்று அனுமானிப்போம். அப்படியானால், உங்கள் எண்ணப்படி அந்தக் குண்டு வைப்பு போர்க் குற்றம் என்று சொல்வீர்களா?

பதில்: நான் சொல்லியிருக்கிறேன், பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் இல்லையென்று.

கேள்வி: மெத்த நல்லது.

செல்வி. யக்மன்: கனம் நீதிபதி அவர்களே! எனது நண்பர் இந்த விடயத்தை மீண்டும் மீண்டும் அரைத்துக் கொண்டிருக்கிறார். பேராசிரியர் பொயில் பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு அவரிடமோ அல்லது பன்னாட்டுச் சமூகத்திடமோ வரை விலக்கணம் இல்லையென்பதை எத்தனை தடவை இந்த நீதிமன்றத்துக்குத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும் என்பது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை.

நாங்கள் வெறுமனே நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறோம். ஒரு விடயம் பயங்கரவாதமா இல்லையா? என்ற கேள்வியை மீண்டும் மீண்டும் அசைபோடுவதால் நான் படிப்பிக்க வேண்டிய பாடவகுப்பைத் தவற விடுகிறேன். அவர் (பொயில்) பயங்கரவாதம் என்ற சொல்லை வரைவிலக்கணம் செய்ய முடியாது என்கிறார். செய்யவும் மாட்டேன் என்கிறார்.

தொடரும்......

### வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள்.

உங்கள் ஆக்கங்களை 18 - 07 - 1997 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடிய வாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, LondonSE1 4QB.**



www.tamilarangam.net






## புறப்பட்ட புயல்கள்

கைகளில் கருவிகொண்டு
காவியம் படைத்திடும் இந்நாளில்
துலா மிதிப்பதும் கொடி பிடிப்பதும்
எமக்குப் புதிதல்ல - ஏனெனில்
நாம் பூக்கள் அல்ல
எதிரியின் தடை உடைத்து
படை அழித்திட புறப்பட்ட
புயல்கள்!

- அபிராமி

## துலாமிதித்து வாழ்ந்த நிலம் துயர்ப்படுக்கை விழலாமோ?

நிலாவிரித்த முற்றத்தில்
நீண்டுவளர் பூப்பந்தல்
விலாதெறிக்க விளையாடும்
வாண்டுகளாய் பாலர்கள்
உலாவெடுத்த ஊர்த்தெய்வம்
உண்டுடுத்த உறவினர்கள்
துலாமிதித்து வாழ்ந்தநிலம்
துயர்ப்படுக்கை விழலாமோ?

- கவரிமான், இலண்டன்



## மறவர் இனம் மண்டியிடாது

எரிபொருள் இல்லை என்று
எமது பயிர் எரியாது!
மண்ணெண்ணை இல்லை என்று
மறவர் இனம் மண்டியிடாது!
அடிமை விலங்கை உடைத்து
பொங்கி எழுந்த பெண்
ஆடும் துலாவில் இன்றெனில்
களத்திலும் நிற்போம் நாளை!

-புதுவை கிருபா, ஜேர்மனி

## தங்கையே ஈழ மங்கையே!

தமிழ் ஈழத் தரைமீட்க
துப்பாக்கி தனைத் தூக்கி
களமாடும் விந்தையொடு
தமிழீழ வளம் காக்க
துலா ஏறி நீரிறைத்த
தங்கையிவர் ஈழமங்கையிவர்!

-றெமிஜியா தேவசகாயம், அவுஸ்திரேலியா

## எம் தமிழ்ப் புனிதையர்

அம்மா என்றிட
அமுதொடு பால்கலந் தன்பினில் அளிப்பவர்
கண்ணே என்றிட
கனிவொடு காதலில் கவலைகள் கரைப்பவர்
மண்ணை வென்றிட
விண்ணதில் வேட்டாய் வீரத்தில் வெடிப்பவர்
பண்படு நிலத்தில் பசியறப் பயிர் செய்ய
புறப்பட்ட பூவையர் எம் தமிழ்ப் புனிதையர்!

-அமலா ஜெயந்தன், ஜேர்மனி

## புரட்சிப்பெண்

அடுப்பங்கரைப் பெண்ணே -நீ,
அடுப்பூதத்தான் என்றாரே எம் மூத்தோர்
விடியாதா எம் வாழ்க்கை என-அன்று
அடுப்படியில் நீயும் புகைந்தாயே-இன்று
பொருண்மியத் தடை போக்க துலா மிதித்தாயே!
ஈழக்கனவை நனவாக்க எடுத்தாயே ஏ.கே
பாரதி காணாத புதுமைப் பெண்ணே!
பிரபாகரன் வழியில் வந்த புரட்சிப் பெண் நீயே!

- செந்தில், சுவிஸ்

## சுதந்திரப் பயிரிடும் பறவைகள்

கல்லூரி நோக்கி மிதிவண்டி மிதித்த கால்கள்-இன்று
ஏற்றம் ஏறி மிதிக்கின்றன
தில்லானா ஆடி அபிநயித்த கைகள்-இன்று
துலாக்கொடியில் நீர் வார்க்கின்றன
நெஞ்சோடு நெருப்பெரிய உம்செயல்
பார்த்து நிற்கிறோம் வெளியே!
துஞ்சிடோம் துவண்டிடோம் என்று
சுதந்திரப் பயிரிடும் பறவைகள் உள்ளே!

-சித்திரா சுதாகரன், ஜேர்மனி.

## வாசகர் கடிதம்:

### களத்தில் ஆசிரியர் குழுவிற்கு!

தமிழீழத்தில் இடம்பெறும் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் 'களத்தில்' பத்திரிகையின் மேல் விசுவாசமுள்ள ஒரு வாசகன் நான். இப்படி ஒரு விடுதலை உணர்வினைத் தட்டி எழுப்பும் பத்திரிகையை நீங்கள் நடாத்தி வருவதையிட்டு முதலில் எனது நன்றி.
எத்தனையோ பெரும் சுமைகளுக்கிடையே இதை நடாத்துகிறீர்களோ நான் அறியேன்.
அத்தனை அம்சங்களும் வரவேற்கத்தக்கன ஒன்றைத் தவிர. 'தாயகம் நோக்கிய பயணம்' எனும் கதை நீண்டுகொண்டு போகிறது. அத்தியாயங்கள் இப்போதான் சூடுபிடித்தாலும் என்னைப் பொறுத்தவரை இது வெளியிடும் பக்கங்களை வேறு தேவைக்குப் பயன்படுத்தலாம் என்று நினைக்கிறேன். இது விடயமாக மற்றைய வாசகர்களின் கருத்தையும் அறிந்து ஆக்கபூர்வமான முடிவை எடுக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.
அடுத்ததாக, 'ஆசிரியர் தலையங்கம்' வாசித்து விளங்குவது கஸ்டமாக இருக்கிறது. சுலபமாக விளங்கும் விதத்தில் எழுதினால் நன்று.

-ஜெயநாதன், இலண்டன்.

## ஆக்கங்கள் ஆனுப்பியோரின் விபரங்களை நன்றிகூறதலுடன் பிரசுரிக்கின்றோம்:

கனிமொழிப்பிரியன் -பிரான்ஸ், பா. முருகதாசன் - ஜேர்மனி, துன்னாலையூர் குகதாசன் - ஜேர்மனி, ஏகாம்பரம் - பிரித்தானியா, சோபனா சுப்பிரமணியம் - டென்மார்க், சடா - ஜேர்மனி, தனம் - பிரான்ஸ், சி. அன்புதாசன் - ஜேர்மனி, வி.து.வை - ஜேர்மனி, ச. மணிவண்ணன் - சுவிஸ், உடுத்துறை சுரேஷ்பாலு-ஜேர்மனி, துரை - சுவிஸ், சி. பிரகாஸ் - சுவிஸ், வெ. சந்திரன் - சுவிஸ், கிருஷ்ணா - ஜேர்மனி, மா. சிவகுமார் - ஜேர்மனி, ஆன் சகானா உலகரட்ணம் - ஜேர்மனி, பியோ சுரேன் உலகரட்ணம் - ஜேர்மனி, நு - சந்திரகுமார் -சுவிஸ், சி. அருள்மோகன் - ஜேர்மனி, செல்வி. நர்மதா யோகி - நோர்வே, எஸ். கே. குமார் - ஜேர்மனி, ஜெ. லக்சாயினி - ஜேர்மனி, ரி. ஜமுனா - ஜேர்மனி, காரை நு. சேகர் - இத்தாலி, சு. வாகீசன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யார் நடத்தும் போரிதென நாமறிவோம் நன்றாக!

**தீ**க்குழம்பில் எங்கள் தேசத்தைத் தோய்ப்பதற்குத்
தூரத்திலிருந்து வந்தவரே கேளுங்கள்!
சாக்கிடங்கிற் தமிழன் சரித்திரத்தைச் சாய்ப்பதற்குச்
சூரத்தனங்கள் செய்பவரே கேளுங்கள்!

போர் நடத்தும் புதுமைகளைப் போதித்துப் பொருள்தேட.
நீர் வந்திருக்கின்றீர் நீதிக்குப் புறம்பாக!
யார் நடத்தும் போரிதென நாமறிவோம் நன்றாக
தேர் செலுத்தும் பாகர்கள் திறமைகளும் நன்கறிவோம்!

ஆயிரமாய் ஆயுதமும் அவைக்குரிய பயிற்சிகளும்
ஈவிரக்கமில்லாத இராணுவத்தார் பெற்றிட. நீர்
பேருதவி செய்துள்ளீர் பெரும்பதவி பெற்றெங்கள்
தாயகத்தைச் சிதைப்பதற்குத் தரையிறங்கி வந்துள்ளீர்

பாரதத்தார் செய்த படுகொலைகள் எம்நெஞ்சைக்
கூர் நெருப்பாய்ச் சுட்டுக் கொன்று நமை வருத்தியதை
நாம் மறக்கு முன்னே நாசத்தைத் தொடர்வதற்கு
நீரெதற்கு வந்தீர்? நிற்காதீர் ஓடுங்கள்!

சிங்களத்தின் சிப்பாய்க்குச் சிரசிலே சரக்கேற்றிச்
செங்களத்துக் கனுப்பவுமைச் சந்திரிகா அழைத்துள்ளாள்
எங்கள் இனத்திற்கு எரியூட்டி யழிப்பதற்கு
உங்கள் உதவிக்கு உலகெல்லாம் மனுப்போட்டாள்!

கூலிக்காய்த் தோளிற் துவக்கோடு புறப்பட்ட. .
காலி மாத்தறையானைக் கட்டியிழுத்து வந்து
போலிக்குப் படையொன்றைப் பூட்டினாள் பாதகத்தி
கேலிக் கூத்தாடிக் கெடுத்தாள் அரசியலை!



கோடிக் கணக்கில் கொடுத்தீர் அவளுக்கு
கொலைகாரியோடு கொழும்புக்கு வந்தீர்கள்!
ஆடிக் களிக்கின்ற அசகாய சூரியவள்
அணிவகுக்க உங்கள் ஆலோசனை கேட்டாள்!

குடித்தீர் புரண்டீர் கொண்டாடி மதுவெறியில்
கொடுத்தீர் அவளுக்கு எமையழிக்கும் யுக்திகளை!

ஓடித்தீர் தமிழ் மக்கள் உம்மீது வைத்த அன்பை
தடுத்தீர் உணவு உடை. மருந்துகளின் வரவுகளை!

மனித உரிமைகளை மதிப்பதாய் மேடைகளிற்
புனித உரையாற்றும் போலியரசுகளே!




மனிதத்தை மண்ணிற் புதைக்கும் கொடியவரின்
அணிநின்று எங்கள் அடிவயிற்றில் உழக்குகின்றீர்!

உரிமையுடன் உலகில் ஓரினமாய் வாழவென
விரும்பியதைத் தவிர வேறென்ன தவறு செய்தோம்!
உரிமைகொள்ள உமக்கும் தேசமுண்டு அரசுண்டு
இரும்பு மனங் கொண்டேன் எம்மண்ணில் அடிவைத்தீர்?

உலக வரலாற்றில் ஒப்பற்ற நிகழ்வுகளைச்
சில கணங்கள் சிந்தியுங்கள், சிலிர்த்து எழுவீர்கள்!
விலங்குகளாய்க் குனிந்து விலங்கோடு நடந்தவர்கள்
நிலங்கள் தமை மீட்டு நின்ற கதை புரிவீர்கள்!

பெருமையுடன் பிறந்த பெருமக்கள் தமிழ்மக்கள்
அருமையான மொழியும் ஆத்மீக உணர்வுகளும்
தரும வழி வாழும் தத்துவமும் கொண்ட. இனம்
ஒருபோதும் அழியாது உண்மையிது உணர்ந்திடுக!

எவன் வீடோ யார் நாடோ எமக்கென்ன என எண்ணி
சவக்காடாய் எம்மண்ணைச் செய்கின்ற முயற்சியிலே
துவக்கோடு நிற்பவர்க்குத் துணையாக நிற்கின்றீர்
ஒருக்காலும் வெற்றி உமக்குக் கிடைக்காது!

பிரபாகரன் என்பான் பிறந்தான் மண்வெற்றிக்காய்
நரகாசுரர் நம்மை நசுக்கும் நிலைபோக
மரபார்ந்த சோழன் மக்கள் அணித் தலைவன்
பிரவாகமெடுத்துப் பெருந்தலைவனாய் நின்றான்!

இறக்குமதிச் சரக்குகளால் எங்கள் விடுதலைக்கு
அரப்பு வைக்க எண்ணும் அம்மணியின் அரசியலை
இறக்கி வைக்கும் காலம் எண்ணி வெகுதூரமில்லை!
பறக்கும் எங்கள் மண்ணின் பாய்புலியின் கொடிகள்!

அந்தநாள் பூக்கும் அப்போது நீரெல்லாம்
வந்து நம் தேசத்தை வணங்கிவிட்டுப் போவீர்கள்!
வெந்த எம் நிலத்தில் வேர் உயிர்க்கும் விழுது விடும்
சிந்தனை செழிக்கும் செந்தமிழே மொழியாகும்!

**- புலவர் சிவநாதன்**

www.tamilarangam.net

# வெல்லுவோம் நாங்கள்



தமிழீழம் எங்கள் தாயடா
சாகவே நீ வந்தாயடா
வெறியனே உன்னைக் கொல்லுவோம்
வெல்லுவோம் நாங்கள் வெல்லுவோம்
கடல் பொங்கினால் போல் எழும்
எங்கள் வீரர்
களத்திலே சங்கை ஊதினாய்
அட எங்கள் மண்ணில்
உடல் துண்டாய்
அழியவோ வந்து மோதினாய்

**எந்தமிழ் மக்கள் உணர்வில்லாக் கற்கள்**
**என்றா நினைத்தாய் ஓடடா**
**செந்தமிழ் ஈழம் சிறுத்தைகளைத் தன்**
**சேய்களாய் ஈந்த நாடடா**

**அழகுபூத்த எமது மண்ணை அழிக்க நினைத்தவா**
**அகதியாக்கி தெருவினோரம் மழையில் நனைத்தவா**
**அமைதியாக உறங்கும் நேரம் உனக்கு இனியில்லை**
**அன்னை தேசம் விடியும் வரையில் எமக்கும் அது இல்லை!**

கூறடா எந்த நாடுந்தன் மண்ணை
கொள்ளை கொடுக்க விரும்புமா?
ஊரை அழித்தாய் உன் படைக் கூட்டம்
உயிரோடு வீடு திரும்புமா?
படை கொண்டு எங்கள் மண்ணில் நீ
பாய்ந்தால்
பாடையில் உன்னைத் தூக்குவோம்.

